Registered as a news paper.  பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை: ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 புரட்டாதி- 01 ஹிஜ்ரி 1428 சஃபான் 12 (17.09.2005) சனிக்கிழமை இதழ்:352

# தமிழ்மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் சமத்துவமாக வாழ உதவவேண்டும்!



## அவுஸ்ரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை

சிட்னி

தமிழர்கள் சுயஉரிமை பெற்றவர்களாக, சமத்துவமாக வாழும் கூட்டாட்சி முறையை ஏற்படுத்தவேண்டும். தமிழர் பிரதேசங்களைப் பார்வையிட்டு அங்கே என்ன நடக்கிறது என்பதை சர்வதேச சமூகம் உணர்ந்துகொள்ள வேண்டும் என அவுஸ்ரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநில ஸ்ரத் பீல்ட் தொகுதியின் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான வேர்ஜினா ஜட்ஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர் -

இலங்கை இப்போது பிரச்சினையில் உள்ளது. அங்கே குடியுரிமை, அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகள் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படவில்லை. இலங்கைக்கு கடந்த வாரம் நான் சென்றிருந்தேன். சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிசெய்ய அங்கு சென்றபோதுதான் இதை நான் பார்க்க நேரிட்டது.

என்னுடையஸ்ரத் பீல்ட் தொகுதியில் உள்ள 3 ஆயிரம் தமிழர்களிடம் வேண்டுகோள் விடுத்து(12 ஆம் பக்கம் பார்க்க)

## குழு மோதலில் காயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு!


யாழ்ப்பாணம்

தென்மராட்சி - கொடிகாமம் பகுதியில் ஒரு வாரத்துக்கு முன்னர் இடம்பெற்ற குழுமோதலின் போது தலையில் சூட்டுக்காயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

கொடிகாமம் - தவசிகுளத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி தங்கம் (வயது 32) என்பவரே உயிரிழந்தவராவார்.


இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - கொடிகாமம் பகுதியில் ஒரு வாரத்துக்கு முன்னர் இடம்பெற்ற குழுமோதலில் தலையில் சூட்டுக்காயமடைந்த மேற்படி நபர் சிகிச்சைக்காக சாவகசேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கடந்த ஏழு நாட்களாக சிகிச்சை பெற்றுவந்தார்.

எனினும், சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றுமுன்தினம் இவர் உயிரிழந்தார்.



## மலையாள மாந்திரீகர் மீது கொக்குவிலில் தாக்குதல்!

### வீடும், வாகனங்களும் எரிப்பு



யாழ்ப்பாணம்

கொக்குவில் கிழக்குப் பகுதியில் கடந்த ஒரு வருடமாகத் தங்கியிருந்து - தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மலையாள மாந்திரீகர் ஒருவர் பாதிக்கப்பட்ட சிலரால் தாக்கப்பட்டார்.

நேற்றுக்காலை 7 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கொக்குவில் கிழக்கு உடையார் வீதியில் கடந்த ஒரு வருட காலமாக இந்தியாவைச் சேர்ந்த மலையாள மாந்திரீகர் ஒருவர் தங்கியிருந்து மாந்திரீக வேலைகளில் ஈடுபட்டுவந்தார்.

இவர் மாந்திரீகம் என்ற பெயரில் தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்ததாகத் தெரிவித்து - இவரது மாந்திரீக நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட சிலர் நேற்று வீட்டுக்குள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச்சட்டத்தை அரசாங்கம்

## ஓய்வு பெற்றுச் செல்ல முன்னர்

நேற்றுமுன்தினம் இவர் உயிரிழந்தார்.

# அவசரகாலச்சட்டத்தை அரசாங்கம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்தது!

கொழும்பு —

அவசரகாலச்சட்டம் மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் பேசிய போதே - அரசாங்கப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா இதை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான சட்டமூலம் எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு - ஒப்புதல் பெறப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த மாதம் 12 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி சந்திரிகா அவசரகாலச்சட்டத்தை உடனடியாகப் பிரகடனம் செய்தார். பின்னர் - இதற்கு நாடாளுமன்ற அங்கீகாரம் பெறப்பட்டது.

நாடாளுமன்ற அங்கீகாரத்துடன் அவசரகால சட்டத்தை ஆகக்கூடியது ஒரு மாதத்துக்கே நடைமுறைப்படுத்தலாம் என்பதாலும் - கடந்த 13 ஆம் திகதியுடன் அவசரகாலச்சட்டம் வலுவிழப்பதாக இருந்தபோதும் அரசு அதை நீடிப்பது பற்றிய அறிவிப்பை வெளியிடாததால் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஓய்வு பெற்றுச் செல்ல முன்னர் நோர்வேயை அகற்றவேண்டும்!

## சந்திரிகாவிடம் ஹெல உறுமய கோரிக்கை

கொழும்பு —

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிச்செல்ல முன்னர் நோர்வே அரசாங்கத்தை சமாதான நடவடிக்கைகளில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஹெல உறுமயவின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஓமல்பே சோபித தேரர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

விடுதலைப்புலிகளை நோர்வே அரசாங்கம் பாதுகாத்து வருகிறது. ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லமுன்னர் சந்திரிகா இந்த நாட்டுக்காகச் செய்யக்கூடிய மிகப்பெரிய சேவை சமாதான நடவடிக்கைகளில் இருந்து நோர்வேயை வெளியேற்றுவதுதான்.

நோர்வேயை இந்த நாட்டில் சமாதான நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடுத்தினால் அதற்கான முழுப்பொறுப்பையும் ஜனாதிபதி சந்திரிகாவே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# அமரபுர மகாநாயக்க தேரர் மட்டக்களப்புக்கு விஜயம்!

## புலிகளையும் சந்திக்கத் திட்டம்

கொழும்பு —

அமரபுர பௌத்த பீடத்தின் மகாநாயக்கர் திபுல்தெனி சிறி ஞானஸ்ஸர தேரர் தரை வழியாக நேற்று மாலை மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்.

இனங்களிடையேயும், மதங்களிடையேயும் ஐக்கியத்தை வலுப்படுத்தும் வகையில் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ள மகாநாயக்கர், நேற்று மாலை மட்டக்களப்பு மங்களராமய விகாரைக்குச் சென்றார்.

விகாரையில் சர்வ மதத் தலைவர்களுடனான சந்திப்பில் இன ஐக்கியத்தின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# காவலில் உள்ள பொலிஸார் மூவரை உறவினர்கள் சந்திப்பதற்கு அனுமதி!

கொழும்பு —

தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸாரைச் சந்திக்க அவர்களின் உறவினர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைந்தபோது கைது செய்யப்பட்ட பொலிஸார் மூவரையும் அவர்களின் உறவினர்கள் சந்திப்பதற்கு வாய்ப்பளிக்குமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரினூடாக வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதை விடுதலைப் புலிகள் ஏற்றிருப்பதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி டொக்டர் ரிராணி விஜயமான்ன தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக்கான திகதியை விடுதலைப் புலிகள் அறிவித்ததும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் உறவினர்களை வன்னிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி டொக்டர் ரிராணி விஜயமான்ன மேலும் தெரிவித்தார்.

# செஞ்சிலுவைச் சங்கம் நடத்தும் இலவச மருத்துவ சேவை

வேலணை—

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வேலணைப்பிரிவு மற்றும் புங்குடுதீவு அலகு ஆகியவற்றின் உதவியுடன் இலவச மருத்துவ முகாம் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை புங்குடுதீவு மகாவித்தியாலத்தில் சங்கத்தின் யாழ்.கிளைத்தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி திருமதி.ஜெ.ஶ்ரீஸ்கந்தராசா தலைமையில் வைத்திய கலாநிதிகளும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதி வருட மாணவர்களும் வைத்திய சேவையை வழங்கவுள்ளனர்.

வைத்திய வசதி குறைந்த புங்குடுதீவு மக்கள் வைத்திய வசதி, வைத்திய ஆலோசனை ஆகியவற்றைப் பெற்று பயனடையுமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அத்துடன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையின் சார்பில் புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் 50 தொண்டர்களுக்கு முதலுதவிப்பயிற்சியின் இரண்டாவது அமர்வும் நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என சங்கத்தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தெரிவித்தார்.

# இறுதிப் போட்டி

வடமராட்சி மென்பந்து துடுப்பாட்ட சங்கம் நடத்தும் மென்பந்து துடுப்பாட்ட போட்டியின் இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இறுதிப் போட்டியில் கரவெட்டி ஸ்போன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கழுகுகள் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

இந்த நிகழ்வில் வடமராட்சி மென்பந்து துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர் பே.வேதாபரணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

# கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் சனசமூக நிலைய கட்டடத் திறப்பு விழாவும், நூலக திறப்பு விழாவும் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வின்போது முன்பள்ளி இரவுநேர பாடசாலை ஆகியவற்றின் ஆரம்ப நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

# சதுரங்க தெரிவுப் போட்டி இன்று யாழ்.இந்துவில்

யாழ்ப்பாணம்—

இந்த ஆண்டு இலங்கையில் நடைபெறவிருக்கும் ஆசிய இளைஞர்களுக்கான சதுரங்க சம்பியன் போட்டியில் கலந்துகொள்ள போட்டியாளர்களைத் தெரிவு செய்வதற்கும், தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டியில் கலந்துகொள்ளவுள்ள போட்டியாளர்களைத் தெரிவு செய்வதற்குமான சதுரங்கப் போட்டி இன்று காலை 9 மணிக்கு யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டி இலங்கையின் 09 மாகாணங்களிலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் 2005.01.01 திகதிப்படி 9, 11, 13, 15, 20 வயதுக்குட்பட்ட ஆண், பெண் பிரிவுகளில் போட்டியாளர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

ஒவ்வொரு பிரிவிலும் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் இடத்தைப்பெறும் வீரர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், இலங்கை சதுரங்கச் சம்மேளனத்தின் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

போட்டியாளர்கள் வயதை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் இன்று காலை 9 மணிக்கு இந்து ஆரம்ப பாடசாலைக்கு வருகைதருமாறு யாழ்ப்பாணம் சதுரங்க சம்மேளனம் அறிவித்துள்ளது.

# மாதாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம்—

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு சிவன் பண்ணை வீதி, கொட்டடியில உள்ள சங்க காரியாலயத்தில் இடம்பெறும். இந்தக் கூட்டத்தில் சங்க உறுப்பினர்களை கலந்துகொள்ளுமாறு செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

# சிறு செய்திகள்

## 1000 பெண்கள் ஒன்றுகூடுவர்

யாழ்ப்பாணம்—

யாழ்.பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடுசெய்துள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கான ஆயத்த வேலைகள் செய்வதற்காக நாளை யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆயிரம் பெண்கள் ஒன்று கூடவுள்ளனர். காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வின் ஆரம்ப வேலைகளை முன்னெடுப்பது தொடர்பாக இந்தப் பெண்கள் ஒன்றுகூடல் நிகழ்வில் ஆராயப்படவுள்ளது.

## உதைபந்தாட்டப் போட்டி

வடமராட்சி—

ஜனசத்தி சுழல் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட அரை இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 4.30 மணிக்கு வதிரி டைமன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் வதிரி டைமன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் பொமேர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(12)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்—

சுண்டுக்குளி புனித திருமுழுக்கு ஆலய பங்கு மைந்தன் அருட்பணி அந்தோனிப்பிள்ளை லோயிட் சாந்திக்குமார் குருத்துவப் பணியின் 25 ஆம் ஆண்டு நிறைவு விழா (யூமிலி) நாளை காலை 6.30 மணிக்கு சுண்டுக்குளி புனித திருமுழுக்கு ஆலய முன்றலில் பங்குத் தந்தை அருட்பணி தோம்மையப்பு யேசுதாஸர் தலைமையில் நடைபெறவுள்ளது.

## இறுதிப் போட்டி

அரியாலை—

அரியாலை சனசமுக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அமரர் உதயசேகரம் ஞாபகார்த்தமாக சின்னத்தம்பி ஞானசேகரத்தின் ஆதரவில் இன்று காலை 7 மணிக்கு ஐந்து மைல் மரதன் ஓட்டப்போட்டி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து காலை 8 மணிக்கு சிறி நகையகம் ஆதரவுடன் மூன்று சில்லு சைக்கிள் ஓட்டப்போட்டியும், சற்குணம் ஆதரவில் காலை 10 மணிக்கு கிரிக்கெட் இறுதி ஆட்டமும், நவகலா ஆதரவில் இரவு 8 மணிக்கு கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியும் இடம்பெறவுள்ளது. (12)

## போயாதின ஆன்மிக நிகழ்வு

யாழ்ப்பாணம்—

பகவான் ஶ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் போயாதின ஆன்மிக நிகழ்வுகள் இன்று அதிகாலை 5 மணிமுதல் இடம்பெறவுள்ளது. நகர சங்கீர்த்தனம், கொடியேற்றம், பஜனை, சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெற்று நண்பகல் நாராயண சேவையுடன் நிகழ்வுகள் நிறைவுபெறும். (111)


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

திருநெல்வேலியில் சிவன் கோவிலுக்கு மேற்குப் பக்கமாக சகல வசதிகளுடன் அமைந்த வீடும், தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு - 2226460, க.ஜெயாநந்தன், 95, மணல்தறை ஒழுங்கை, திருநெல்வேலி. (2059)







## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

**11 ஆம் ஆண்டு நிறைவு விழா**

நாள்: 19.09.2005 திங்கட்கிழமை
நேரம்: 10.00 மணி
இடம்: சங்க மண்டபம்.
559 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

அங்கத்தவர்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகம்
யா.மா.பே.உ.ச

(சி.4611)

# CARITAS - HUDEC JAFFNA
# VACANCY

## 1. Livelihood Manager

**Base Station : Jaffna & Vettilaikerny**

**Responsibilities :**

The post holder reports directly to the overall Livelihood Advisor (Expatriate). The post holder will undertake the following activities.

- Direct, supervise and manage project officers, project managers and animators/social workers in identifying projects through a participatory process which are inclusive of a diverse group of individuals, including vulnerable groups.
- Ensure a high level of program quality in livelihood project design, implementation, monitoring and evaluating.
- Identify capatity building needs of team's project officers, project managers and animators/social workers and local partners.
- Organize trainings and workshops to build and improve capacities of the above mentioned staff.
- Prepare accurate and timely reports to donors.
- Share experiences, methodologies and lessons learned with CI Livelihood partner in other Diocese of Sri Lanka.
- Represent Caritas-Hudec on the issue of livelihoods and income generating activities at district and divisional level coordination meetings with government, NGOs, UN organisations and the private sector.
- Work with project officers to regularly monitor and evaluate livelihood programs (fisheries, agriculture, small enterprises)

**Skills and Competencies:**

**Essential**

- Demonstrated manage experience with a special emphasis on project management related to micro-en-terprise and income generating activities.
- Experience using word processors, spreadsheets, and e-mail.
- Knowledge and experience working with participatory methods.
- Demonstrated knowledge in agriculture, fisheries and small enterprises sectors.
- Fluency in Tamil and English.
- Good communication skills.

## 2. Livelihood Officer :

**Base Station : Jaffna & Vettilaikerny.**

**Responsibilities :**

The post holder reports directly to the Livelihood Manager. The post holder will undertake the following activities.

- Ensure a high level of program quality in livelihood project design, implementation, monitoring and evaluation.
- Organize trainging & workshops to build & improve capacivities of the above mentioned staff.
- Represent Caritas-Hudec on the issue of livelihood & income generating activities at district & divisional level coordination meetings with government, NGOs, UN organizations & the private sector.
- Professionalism, Integrity, Interpersonal skills, goal focus
- Work with project officers to regularly monitor & evaluate livelihood programs (fisheries, agriculture, small enterprises)

**Skills and Competencies:**

**Essential**

- Demonstrate management experience with a special emphasis onproject management related to micro - enterprise and income generating activities.
- Experience using word processors, spread sheets & email.
- Knowledge & experince working with participatory.
- Demonstrated knowledge in agriculture, fisheries & small enterprises sector.
- Fluency in Tamil & English.
- Good communication skills.

Caritas - Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.

If you would like to be a part of a dedicated team in a humanitarian context, Please send us your CV & motivation letter including your contacts & minimal two references to the following address, latest by

23 August 2005
Father Jeyakumar
Caritas - Hudec Jaffna
14 Mathew's Road, Deogu Street,
Jaffna.

Or e - mail : hudec@sltnet.lk

PLEAE SPECIFY THE POST YOU APPLY FOR IN YOUR APPLICATION WITH CONTACT TELEPHONE NUMBERS

[C/4610]

# பேரினவாதிகளுடனான மஹிந்தவின் ஒப்பந்தம் மறுபரிசீலனை செய்யப்படும்

## அனுரா தெரிவிப்பு



கொழும்பு —

சிங்களப் பேரினவாதிகளுடனான மஹிந்த ராஜபக்ஷவின் ஒப்பந்தங்கள் குறித்து சுதந்திரக் கட்சி மறுபரிசீலனை செய்யும் என்று வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

நியூயோர்க்கிலிருந்து நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் மஹிந்தவின் ஒப்பந்தங்கள் குறித்து ஆலோசனை நடத்தினேன். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக மஹிந்த மேற்கொண்டிருக்கும் ஒப்பந்தங்கள் குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி கண்டிப்பாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற சந்திரிகாவின் யோசனையை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மஹிந்தவின் ஒப்பந்தங்கள் கட்சியின் கொள்கையையோ, மக்களையோ, நாட்டையோ பாதிக்காததாக இருக்கிறது என்று சுதந்திரக் கட்சி முடிவுசெய்தால் அவரை நான் முழுமையாக ஆதரிப்பேன்.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர் காணலில் - ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தான் அக்கறை கொள்ளவில்லை என்று கூறியிருந்தார். ஜனாதிபதி சந்திரிகாவும் இது தொடர்பாக வருத்தத்தில் இருப்பதாகவும் அவர் மேலும் கூறியிருந்தார்.

## சிவராம் கொலை

# சந்தேக நபர் பீற்றருக்கு விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு —

ஊடகவியலாளர் சிவராம் கொலை சந்தேகநபரான சிறீஸ் கந்தராஜாவை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைத்திருக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடுவெல நீதிமன்றில் கடந்த புதன்கிழமை நீதிபதி சாம்ப ஜானகி ராஜரட்ண முன்னிலையில் சந்தேக நபர்ஆஜர் படுத்தப்படுவதாக இருந்தது. ஆனால், பாதுகாப்பு காரணங்களைக் காரணம் காட்டி அவர் ஆஜர் செய்யப்படவில்லை.

நீதிமன்றுக்கு வந்திருந்த கொழும்பு குற்றத்தடுப்பு அதிகாரி ராஜபக்ஷ, இந்த வழக்கின் விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை என்று தெரிவித்தார்.

# மாணவனை தாக்கிய குற்றத்துக்காக அதிபர் உட்பட மூன்று பேருக்கு சிறை!

கொழும்பு —

நிற ஆடை அணிந்து பாடசாலைக்குச் சமுகமளித்தார் எனத் தெரிவித்து மாணவன் ஒருவரைக் கடுமையாகத் தாக்கிய கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க பாடசாலை உப அதிபர் மற்றும் 2 ஆசிரியர்களுக்கு கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி ரட்ணாயக்க இரண்டு வருட சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

பாடசாலையின் விஞ்ஞான பிரிவுக்குப் பொறுப்பான உதவி அதிபர் - எதிரிசூரிய முதியான் சலாகே காமினி எதிரிசூரிய, ஆசிரியர்களான ஆராய்ச்சியே தயாரட்ண சாந்தகுமார பெரேரா, அபேகோன் முதியான் சலாகே ஆரியக்கோன் ஆகியோரே சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களாவர்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் 16 ஆம் திகதியும், மறுநாளும் 18 வயதுக்குட்பட்ட ஜெகான் சோமரட்ண என்ற மாணவனை நிற ஆடை அணிந்து வந்ததாகத் தெரிவித்து, மேற்படி 3 ஆசிரியர்களும் மாணவனின் தலையில் கடுமையாகத் தாக்கியதாகத் தெரிவித்து சட்டமா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

இந்த ஆசிரியர்களுக்கெதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

(தே)

# நீதிமன்றிலிருந்து தப்பியோட முயன்ற கைதி ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்!

கொழும்பு —

மாரவில நீதிமன்ற சிறைக்கூடத்திலிருந்த சந்தேக நபரொருவர் சிறைச்சாலை அதிகாரியைத் தாக்கிவிட்டு கிரனேட் கைக்குண்டுடன் தப்பியோட முற்பட்டபோது, ஏனைய சிறைச்சாலை அதிகாரிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

மாரவில நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையொன்று நடைபெற்றுக்கொண்டிருந்த போது இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

இதனையடுத்து நீதிமன்றத்தினுள் பெரும் பதற்றம் நிலவியது.

சந்தேகநபர் எடுக்கக்கூடிய வகையில் பை ஒன்றினுள் இரு கைக்குண் டுகளை சிறைக்கூண்டிற்கருகே பெண் ஒருவர் கொண்டு வந்து வைத்ததாகவும் தெரியவந்துள்ளது.

மற்றொரு சந்தேகநபரை வெளியே எடுக்க கூண்டைத் திறந்தபோதே குறித்த சந்தேக நபர் வெளியே பாய்ந்து இந்தப் பையை எடுத்துள்ளார். அவரைப் பிடிக்கச் சென்ற சிறைச்சாலை அதிகாரியை சந்தேக நபர் குண்டு இருந்த பையினால் தாக்கினார். அவ்வேளை அந்தப் பை அவரின் கையிலிருந்து நழுவி விழுந்துள்ளது.

சந்தேகநபர் ஓடித்தப்ப முயன்ற போதிலும் சிறைச்சாலை அதிகாரிகள் அவரைப் பிடித்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குண்டுகள் இருந்த பை சந்தேக நபரின் கையிலிருந்து நழுவியதால் அவரால் நீதிமன்றத்துக்குள் குண்டுகளை வீசமுடியாது போனது.

நீதிமன்றத்துக்கு இந்தக் குண்டுகளைக் கொண்டுவந்த பெண்மணி நீதிமன்றத்துக்கு அருகிலுள்ள வீடொன் றில் மறைந்திருந்தபோது கைதுசெய்யப்பட்டார்.

தப்பியோட முயன்றவர் பல கொலை, கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புயைடயவர் என்று கூறப்படுகிறது.

# உடத்தலவின்ன கொலைவழக்கு இருவர் விடுதலையாகினர்!

கொழும்பு —

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தொடர்புபட்ட உடத்தலவின்ன படுகொலை வழக்கில் இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்கின் விசாரணை நேற்றுமுன்தினம் கொழும்பு நீதிமன்றில் நடைபெற்றது.

வழக்கில் 11 ஆவது மற்றும் 12 ஆவது எதிரிகளாகச் சேர்க்கப்பட்டுள்ள இராணுவ வாகன ஓட்டுனர் நிமால் தம்மிக சிறிவர்த்தன மற்றும் ரத்வத்தையின் அலுவலக எழுத்தாளர் மகிந்த விஜயசிங்க என்ற பான் மகிந்த ஆகியோர் இந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு உரிய ஆதாரம் இல்லை என்று பிரதி சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ நீதிமன்றில் தாக்கல் செய்த அறிக்கையையடுத்தே இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

# தமிழீழ தனியரசுப் பிரகடனப் பணியில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனராம்!

## அரச புலனாய்வுத்துறை கூறுகிறது

கொழும்பு —

தமிழீழ தனியரசுப் பிரகடனத்துக்கான பணிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டிருப்பதாக அரசுக்கு அனுப்பிய அறிக்கையில் புலனாய்வுத்துறை அச்சம் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

தமிழீழ விடுதலைப் புலிகள் தன்னிச்சையாகவே தமிழீழ தனியரசுப் பிரகடனத்தை வெளியிடக்கூடும். இது தொடர்பாக சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறும் நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு வாழ் தமிழர்களின் மீளமைப்புக்கான அரசாங்கத்தின் உதவிகள் எதுவும் சென்றடையாத நிலையில், இதை சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு விடுதலைப் புலிகள் கொண்டு சென்றுள்ளனர்.

சுனாமி மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு உயர்நீதிமன்றத்தால் முடக்கிவைக்கப்பட்டுள்ளது. இதனால், தமிழர் தாயகப் பகுதிக்கு சர்வதேச நிதியுதவியை நேரடியாக வழங்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் விரைவில் கோரிக்கை விடுக்கக்கூடும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல்கள் குறித்து புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

ஐக்கிய நாடுகள் சபையை இந்தப் பிரச்சினையில் தலையிடுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளது சரியானதல்ல. இந்த நடவடிக்கையானது விடுதலைப் புலிகளின் தனியரசுப் பிரகடனத்துக்குத்தான் கண்டிப்பாக உதவக்கூடும்.

காஷ்மீர் பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டை இந்தியா விரும்பாதிருப்பது போல், இலங்கை அரசும் இருந்திருக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்

## கல்வி அமைச்சு தகவல்

கொழும்பு —

நாட்டில் உள்ள தேசிய பாடசாலைகளினதும், நவோதய பாடசாலைகளினதும் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த வருட இறுதிக்குள் இவ்வாறான தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை 750 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

இதன்படி நாட்டின் சகல மாவட்டங்களிலும் கல்வியில் முன்னணியில் இருக்கும் பல பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகவும், நவோதய பாடசாலைகளாகவும் தரமுயர்த்தப்படும்.

தற்போது நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளில் மாணவர்களைப் புதிதாக சேர்ப்பதில் உள்ள நெருக்கடிகளை குறைக்கும் முகமாகவே தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அண்மைக்காலமாக தேசிய படசாலைகளில் மாணவர்களைச் சேர்க்க பெற்றோர்கள் போட்டிகளையும், சிரமங்களையும் சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சாதாரண தரப் பரீட்சை டிசம்பர் 12 இல் ஆரம்பம்

கொழும்பு —

க.பொ.த சாதாரணதர பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இந்தத் தகவலை பாடசாலை பரீட்சைகளுக்குப் பொறுப்பானவரும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளருமான எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்தார்.

இந்தப் பரீட்சை டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகி, 23 ஆம் திகதி வரை நடைபெறும். இதன் விடைத்தாள் திருத்தும் பணிகளின் முதலாவது கட்டம் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதமும், இரண்டாவது கட்டம் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதியும் நிறைவடையும். பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களின் தரவுகள் பரிசீலிக்கப்பட்டு, நிலையங்கள் மற்றும் இணைப்பு நிலையங்களை ஒழுங்கமைக்கும் நடவடிக்கையில் தற்போது பரீட்சைத் திணைக்களம் ஈடுபட்டு வருகிறது.

இந்த வருடம் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண பரீட்சைக்கு 5 லட்சத்து 50 ஆயிரம் பேர் தோற்றுகின்றனர்.

இதேவேளை, கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த சாதாரண பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்ய விண்ணப்பித்தவர்களின் முடிவுகள் அடுத்த வாரத்தில் வெளியிடப்படும் எனவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## தேர்தல் காலத்தில் அரச சொத்துக்களை

# தவறாக பயன்படுத்துவோருக்கு எதிராக நடவழக்கை எடுக்க குழுவொன்று நியமனம்

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அரச வாகனங்கள் உட்பட, அரசாங்க சொத்துக்களைத் தவறான வகையில் பயன்படுத்தும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச ஊழியர்களுக்கு எதிராக லஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தி, குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்கு எதிராக 10 வருட கடூழிய சிறைத் தண்டனையும், ஒரு லட்சம் ரூபா தண்டப் பணமும் விதிப்பதற்கு லஞ்ச மற்றும் ஊழல் விசாரணைக்குழு தீர்மானித்துள்ளது.

தேர்தல் காலத்தில் அரசாங்க சொத்துக்களைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்துபவர்களுக்கெதிராக, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவென லஞ்ச மற்றும் ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் அமீர் இஸ்மாயில் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடக்கம், அடுத்து வரும் அனைத்து தேர்தல்களிலும், லஞ்ச மற்றும் ஊழல் குற்றச்சாட்டு ஆணைக்குழுவினால், அரசாங்க சொத்துகளை தவறாகப் பயன்படுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சு, திணைக்களம் மற்றும் கூட்டுத்தாபனங்களின் வாகனங்களைத் தேர்தல் ஆணையாளரின் அனுமதியின்றி அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது திணைக்கள மற்றும் கூட்டுத்தாபன அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள் தேர்தல் செயற்பாடுகள் அல்லது அதனோடு இணைந்த வேறு செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தினால், அது குறித்து லஞ்ச மற்றும் ஊழல் குற்றத்தடுப்பு பிரிவுக்கு எவரும் முறையிடலாம்.

மக்களிடமிருந்து இத்தகைய முறைப்பாடுகள் கிடைத்தால் அது குறித்து விசாரணை நடத்தி, குற்றவாளிகளுக்கு லஞ்ச ஊழல் சட்டம் 70 ஆவது சரத்தின் கீழ், நீதிமன்றத்தின் மூலம் அதியுச்ச தண்டனை வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட்; இந்தியாவுக்கு இனிங்ஸ் வெற்றி!



புலவாயோ—

சிம்பாப்வேக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி இனிங்ஸால் வெற்றிபெற்றது.

இந்திய - சிம்பாப்வே அணிகளிடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி புலவாயோவில் நடைபெற்றது.

இதன் முதல் இனிங்ஸில் சிம்பாப்வே 279 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பின்னர் முதல் இனிங்ஸில் ஆடிய இந்திய அணி 2ஆவது நாள் ஆட்டநேரமுடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 325 ஓட்டங்களை எடுத்திருந்தது. லக்ஸ்மன் 125 ஓட்டங்களுடனும், கப்டன் கங்கூலி 23 ஓட்டங்களுடனும் ஆடிக் கொண்டிருந்தனர்.

இந்தநிலையில், 3ஆவது நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. லக்ஸ்மன் - கங்கூலி ஜோடி தொடர்ந்து ஆடியது. ஸ்கோர் 356ஐ எட்டியநிலையில் 140 ஓட்டங்கள் எடுத்திருந்த லக்ஸ்மன் ரன் அவுட்டானார். 221 பந்துகளைச் சந்தித்த அவர் 21 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார்.


லக்ஸ்மனைத் தொடர்ந்து களம் புகுந்த யுவராஜ்சிங் 12 ஓட்டங்களிலும், தினேஷ் கார்த்திக் ஒரு ஓட்டத்திலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். 7ஆவது விக்கெட்டுக்கு கங்கூலியுடன் இர்பான் பதான் இணைந்து ஆடினார்.

முன்னணி துடுப்பாட்ட வீரர் போல் ஆடிய பதான் 103 பந்துகளைச் சந்தித்து 6 பவுண்டரிகளுடன் 52 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர், சிறிது நேரத்தில் நிதானமாக ஆடிக்கொண்டிருந்த கங்கூலி சதமடித்தார். இவர் 101 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார். 262 பந்துகளைச் சந்தித்த அவர் 10 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். கங்கூலி ஆட்டமிழந்தபோது அணியின் ஸ்கோர் 8 விக்கெட் இழப்புக்கு 502ஆக இருந்தது.

பின்னர் வந்த கடைசி நிலை வீரர்கள் அதிரடியாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். ஹர்பஜன் சிங் 18 பந்துகளைச் சந்தித்து 4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 37 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். கும்ளே 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். முடிவில் இந்திய அணி 151.3 ஓவர்களில் 554 ஓட்டங்களை குவித்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. சகீர்கான் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

சிம்பாப்வே தரப்பில் மகவீர் 4 விக்கெட்டுக்களையும், டெபங்வா 3 விக்கெட்டுக்களையும், பிளிங்நெட், ஈவிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

275 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் சிம்பாப்வே அணி 2ஆவது இனிங்ஸில் ஆடியது. அந்த அணிக்கு தொடக்கமே அதிர்ச்சி காத்



திருந்தது. பதானின் ஆவேச பந்துவீச்சில் சிம்பாப்வே அணியினர் திணறிப் போயினர்.

18 ஓட்டங்களை எடுப்பதற்குள் அந்த அணி 5 முக்கிய விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. நேற்றைய ஆட்டநேரமுடிவில் அந்த அணி 6 விக்கெட் இழப்புக்கு 67 ஓட்டங்களை எடுத்து இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க போராடிக் கொண்டிருந்தது.

கப்டன் தைபு 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் ஆடிக் கொண்டிருந்தார். இந்தியா தரப்பில் பதான் 4, சகீர்கான், ஹர்பஜன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் தொடங்கியதும் தைபு - பிளிங்நெட் ஜோடி நிதானமாக ஆடியது. இதனால் ஸ்கோர் 110ஐ தொட்டது. ஆனால், பிளிங்ரொப் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அடுத்து டபங்வா களமிறங்கினார்.



ஆனால், ஸ்கோர் 130ஐ எட்டியபோது, தைபு 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அணி நிதானமிழந்தது. அடுத்து டபங்வா 16 ஓட்டங்களுடனும், ஈவிங் 34 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து செல்ல - சிம்பாப்வே அணி 185 ஓட்டங்களுக்குள் சுருண்டது. மகவீர் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் பதான் 4, ஹர்பஜன் சிங் 4, சகீர்கான், கும்ளே தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

முதல் போட்டியில் இந்திய அணி ஒரு இனிங்ஸ், 90 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

# உதைபந்தாட்டப் போட்டியின் இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்—

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் 14ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எல்லாளன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக்கழகமும்,

மாலை 4.30 மணிக்கு குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

## விளையாட்டு

# தாச்சிப் போட்டி

யாழ்ப்பாணம்—

கோப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான தாச்சி சுற்றுப் போட்டியில் - 13 வயதுக்குட்பட்டோருக்கான போட்டி இன்று காலை 8.00 மணிக்கு ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# றிவர்ஸ்-ஸ்விங் முறை பந்துவீச்சுக்காக இங்கிலாந்து மன்னிப்பு கேட்கவேண்டும்!

## வசீம் அக்ரம் தெரிவிப்பு

கராச்சி—

றிவர்ஸ்-ஸ்விங் பந்துவீச்சு யுக்தியைப் பயன்படுத்தியே இங்கிலாந்து அணி ஆஷஸ் தொடரை வென்றது குறித்து மன்னிப்புக் கேட்க வேண்டுமென பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது -

1992ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணி, இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் வக்கார் யுனிஸும் நானும் றிவர்ஸ்-ஸ்விங் பந்துவீச்சைப் பயன்படுத்தினோம். இதனால் நாங்கள் 2-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றோம்.


அப்போது இங்கிலாந்து வீரர்கள், நாங்கள் பந்தைச் சேதப்படுத்துவதாகவும், ஏமாற்றுவதாகவும் புகார்கள் கூறினார்கள். அந்த டெஸ்ட் தொடரில் எங்கள் பந்துவீச்சு ஜோடி 41 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியது.



அதே றிவர்ஸ்-ஸ்விங் பந்துவீச்சு மூலம்தான் இப்போது இங்கிலாந்து அணியினர் அவுஸ்ரேலியாவைத் தோற்கடித்துள்ளார்கள். அவர்கள் சிறப்பாகச் செயற்பட்டது மகிழ்ச்சிதான். எனினும், எங்கள் மீது குறை கூறியதற்காக அவர்கள் மன்னிப்புக் கேட்கவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# கப்டன் பதவியிலிருந்து விலக கங்கூலியை சப்பல் நிர்ப்பந்தம்?

புலவாயோ—



சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் தொடர் ஆரம்பமாக முன்னர், இந்திய அணியின் கப்டன் பதவியில் இருந்து தன்னை விலகுமாறு முக்கியமான ஒருவர் நிர்ப்பந்தித்ததாக கங்கூலி தெரிவித்தார்.

இந்திய - சிம்பாப்வே அணிகளிடையேயான முதல் டெஸ்ட் போட்டியின் 3ஆவது நாள் ஆட்டமுடிவில் அவர் நிருபர்களுக்குப் பேட்டியளித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் தொடர் தொடங்குவதற்கு முன்பு 3 நாள் பயிற்சி ஆட்டம் நடந்தது. இந்தப் போட்டி முடிந்தவுடன் பயிற்சியில் ஈடுபட்டபோது, முக்கியமான நபர் ஒருவர் என்னை கப்டன் பதவியிலிருந்து விலகுமாறு கூறினார். இது எனக்கு மிகவும் நெருக்கடியைக் கொடுத்தது.

பயிற்சியாளர் சப்பல்தான் உங்களை பதவியிலிருந்து விலகச் சொன்னாரா என நிருபர்கள் கேட்டதற்கு இது குறித்து நீங்கள் அவரிடமே கேளுங்கள் என்று கூறினார். மேலும் இந்திய அணி ஒருநாள் போட்டியில்தான் சிறப்பாக ஆடவில்லை.

என்னைப் பொறுத்தவரையில் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் மட்டுமே நான் சரியாக ஆடவில்லை. கடைசியாக 16 டெஸ்டில் ஆடி ஆயிரம் ஓட்டங்களைக் குவித்துள்ளேன்.

சிம்பாப்வே அணி ஒன்றும் சிறந்த அணி இல்லை. இந்த டெஸ்டில் நான் 6 மணி நேரம் நின்று ஆடுவதற்கு என்மீது ஏற்பட்டுள்ள நெருக்கடியே காரணம். இந்த சதம் எனக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது.

தொடர்ந்து நல்ல முறையில் விளையாடுவது என்பது மிகவும் முக்கியமானது. கடந்த ஆண்டில் சிறப்பாக ஆடமுடியாதது துரதிஷ்டவசமானது. என் கப்டன் பதவியை எல்லோரும் விமர்சனம் செய்கிறார்கள். அது உண்மைதான். கடந்த பாகிஸ்தான் போட்டியிலிருந்து நான் சரிவர விளையாடவில்லை. ஆனால், தற்போது அணிக்கு ஆடும் திறமையுடன் உள்ளேன் என கங்கூலி மேலும் கூறினார்.

# ஆஷஸ் டெஸ்ட் தொடர் தோல்விக்காக அணியில் மாற்றம் தேவையில்லை!

## அவுஸ்ரேலிய அணித் தலைவர் கூறுகிறார்



சிட்னி—

ஆஷஸ் டெஸ்ட் தோல்விக்காக அவுஸ்ரேலிய அணியில் மாற்றம் செய்யவேண்டியதில்லை என்று கப்டன் ரிக்கி பொண்டிங் கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரில் அவுஸ்ரேலிய அணி 1-2 என்ற கணக்கில் தொடரை இழந்தது. சுமார் 18 வருடங்களாக ஆஷஸ் தொடரில் அவுஸ்ரேலியா ஆதிக்கம் செலுத்தி வந்தது. உலகின் முதல் நிலை அணியாக விளங்கிவரும் அவுஸ்ரேலியா ஆஷஸ் தொடரை இழந்ததால், கடும் விமர்சனத்திற்கு ஆளாகியிருக்கிறது.

டெஸ்ட் போட்டிகளில் கடந்த 5 ஆண்டுகளில் அவுஸ்ரேலியா அணி சந்தித்த முதல் தொடர் தோல்வி இதுதான் கடந்த 2001ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு எதிராக அந்த அணி தொடரை இழந்திருந்தது.

ஆஷஸ் தோல்வியைத் தொடர்ந்து அவுஸ்ரேலியா அணியை அந்த நாட்டுப் பத்திரிகைகள் ஒரு பிடிபிடித்து விட்டன. அதோடு மட்டுமல்லாமல் முன்னாள் வீரர்கள் பலரும் அணியை நோக்கி கண்டன கணைகளை வீசியவண்ணம் உள்ளனர்.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி சோகத்துடன் நாடு திரும்பியது.

விமான நிலையத்தில் அவுஸ்ரேலிய அணி கப்டன் ரிக்கி பொண்டிங் நிருபர்களிடம் கூறியதாவது-

ஆஷஸ் தொடருக்காக அவுஸ்ரேலிய அணி சரியான முறையில் தயாரானது. போட்டியில் கிடைத்த வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்த தவறிவிட்டோம். டெஸ்ட் போட்டிகளில் சரிவை பெரிய ஆட்டங்கள் பலவற்றில் சரிசெய்திருக்கிறோம். ஆனால் இந்தப் போட்டியில் அதை செய்யவில்லை.

இந்தப் போட்டியில் தோல்வியுற்றது வருத்தம் அளிக்கிறது. எங்களைவிட இங்கிலாந்து அணி சிறப்பாக ஆடியது. அடுத்த ஆஷஸ் தொடரில் வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஒரு போட்டித் தொடரில் தோற்றதற்காக அணியில் பெரியளவில் மாற்றம் செய்யத் தேவையில்லை. நான் தொடர்ந்து கப்டன் பதவியில் நீடிக்க விரும்புகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் கரப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனானது

வடமராட்சி—

ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகத்தால் மறைந்த நண்பர்கள் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் முதலாவது சுற்றில் 25இற்கு 16 புள்ளிகள் என்ற வித்தியாசத்திலும், இரண்டாவது சுற்றில் 25இற்கு 11 புள்ளிகள் என்ற அடிப்படையிலும், மூன்றாம் சுற்றில் 25இற்கு 23 புள்ளிகள் என்ற அடிப்படையிலும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம், காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை தொடர்ச்சியாக மூன்று சுற்றிலும் வென்று சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

தொடர்ந்து 3ஆம் இடத்திற்கான சுற்றுப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகை எதிர்த்து, ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதியது. முதல் இரு சுற்றுக்களிலும் 25:18, 25:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் முன்னிலை வகித்தது.

ஆனால், மூன்றாவது சுற்றில் 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு முன்னிலை வகித்தது. இதனால், நான்காம் சுற்றும் நடைபெற்றது. இதில் இந்து இளைஞர் 25:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டி மூன்றாம் இடத்தைப் பெற்றது.

இறுதிப் போட்டியில் சிறந்த ஆட்ட நாயகனாக அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த பாஸ்கரன் தெரிவு செய்யப்பட்டார். (12)

# இரட்டைத் தலை அரண்மனை

சோழியபுரம் என்னும் ஊர் மீன்பிடித் தொழிலுக்கு பிரசித்தி பெற்ற பெயராகும். அங்கு வாழும் மக்கள் மீன்பிடித் தொழிலைக் கண்கண்ட தெய்வமாக மதிக்கிறார்கள். பாண்டிய நாட்டின் அரசன் இளங்குன் றன் ஆகும். அந்த நாட்டின் ஒரு பிரிவே சோழியபுரம். சோழியபுரம் ஊரிலே காடு ஒன்று உள்ளது. காட்டையடுத்து ஒரு மலைத்தொடர்; மலைத் தொடரை அடுத்து கடல் என்ற ஒழுங்கில் உள் ளது. அந்த மலைத் தொடரின் நடுவே ஒரு அரண்மனை. அந்த அரண் மனையில் இருடன் என்னும் அரக்கன் இருந்தான் அந்த அரண் மனையில் இருந்து தான் நாட்டில் நடப்பவற்றை அவதானித்து வந்தான். நடப்பவற்றை மலையன் என்னும் அரக்கனுக்கு செய்தி அனுப்புவான். அரக்கர்களில் பெரியவனே மலையன். அவனுக்கு பல சக்திகள் உண்டு. மலையனது எண்ணம், அவா பாண்டிய நாட்டைத் தனதாக்கிக் கொள்வதுதான். ஆனால் இதுக்கு முட்டுக்கட்டையாக இருப்பவன் தில்லாலன் என்னும் வீரன். தில்லாலன் காட்டிலே வளர்ந்து வந்தான். தில்லாலனை வளர்த்தது ஒரு முனிவராகும். தில்லாலனுக்கு மாயங்கள் அனைத்தையும் சிறுவயது தொட்டே முனிவர் பயிற்றுவித்தார். இற்றைக்கு இளங்குன்றனுக்கு குழந்தைகள் பிறக்கவில்லை. அதற்காக யாகம் செய்தான். யாகத்தின் பயனாக இரு குழந்தைகள் பிறந்தன. பிறக்கும் போதே ஒரு குழந்தைக்கு கால் வாதம் இருந்தது. இதை மற்றைய அரசர்கள் அறிந்தால் . இழிவாகப்



பேசுவார்கள் என்று நினைத்த இளங்குன்றன் கால் வாதமுள்ள குழந்தையை வளர்த்து வித்தைகள், மாயங்கள் என்பவற்றைப் பழக்கினான். அந்தக் குழந்தைக்கு கர்மா என அரசன் பெயர் சூட்டினான். குழந்தை வளர்ந்து பெரியவனாகி யது.

27 வயதின் பின் முதல் முறையாக கர்மா காட்டுக்குச் சென்றான். காட்டைப்பார்த்து வியந்துபோனான். காட்டிலே மரங்கள் அனைத்தும் விசாலமாக தமது கிளைகளைவிட்டு வளர்ந்திருந்தன. அந்தக் காட்டிலே ஒரு குளம் கர்மாவின் கண்ணுக்குத் தென்பட்டது. அந்தக் குளத்தில் சிங்கம், புலி, மான் அனைத்தும் அருகருகே நின்று நீர் அருந்தின.


இவ்வாறு விலங்குகள் ஒற்றுமையாக வாழ்வதை நான் குலைக்க வேண்டுமா? என்று கர்மாவின் மனதில் கேள்வி எழுந்தது. வேட்டையாட வந்த கர்மாவை அந்தக் காடு மனம் மாறச் செய்தது. திடீர் என்று கர்மாவின் கண்ணில் ஒரு மனிதன் தென்பட்டான். அவன் வேறு யாரும் அல்ல தில்லாலன். பின் கர்மா காட்டு எல்லையை நோக்கி நடந்தான். அங்கிருந்த மலைத்தொடரின் மேல் கண் ணைப் பறிக்கும் வடிவில் ஒரு அரண்மனை தென்பட்டது. மலை களின் நடுவே அருவியில் சலசலவென ஓடும் சத்தம் மனதுக்கு இதமளித்தது அரண்மனையைச் சென்று பார்வையிடும் ஆசை கர்மாவுக்கு தென்பட்டது. உடனே கர்மா அரண்மனையை அடைந்தான். கர்மா வருவதைக் கண்ட இருடன் கர்மாவைச் சிறைபிடித்தான். இதையறிந்த அரசன் தனது படைகளை அனுப்பினான். படைகள் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டன. இதையறிந்த இருடன் தனது அரக்க படையை அனுப்பினான். மலைத்தொடரிலே இரு படைகளுக்கும் பெரும் போர் நடந்தது. போரின் முடிவு இருடனுக்கு சாதகமாக இருந்தது. அரசனின் படைகள் தோல்வியுடன் தப்பியோடின. அரசன் தன் மகனைக் காப்பாற்றும் வீரனுக்கு தனது நாட்டையே பரிசாக அளிப்பதாகப் பறைசாற்றினான். ஆனால் இருடனுக்குப் பயந்து யாரும் வரவில்லை. முனிவர் தில்லாலனைக் கூப்பிட்டு நீதான் அந்தக் கர்மாவைக் காப்பாற்றவேண்டும்.

உனக்கு நாடு வேண்டாம். ஆனால் நீ கர்மாவை சென்று காப்பாற்று. இருடனுக்குப் பின்னால் இருக்கும் மர்மத்தை அறிய வேண்டும். என்று முனிவர் தில்லாலனிடம் கூறினார். தில்லாலன் சரியென்று காட்டை நோக்கிப் புறப்பட்டான். சிறிது தூரத்தின்பின் மலைத்தொடரை அடைந்தான். தில்லாலன் வருவதையறிந்த இருடன் படைகளை அனுப்பினான். முதலில் வந்தவர் அதே கெதியில் கீழே விழுந்தார். மற்ற ஒரு அரக்கன் ஓடிவந்து தில்லாலனுக்கு அடிக்கமுற்பட தில்லாலன் ஒரு குத்துவிட்டான். வந்த வேகத்திலே அரண்மனை யன்னலை உடைத்துக்கொண்டு விழுந்தான். மற்றை யவர்கள் பயத்தால் ஓடி மறைந்தார்கள். இவனுடன் நேராக மோதக் கூடாது என்றுவிட்டு இருடன் மறைந்தான். தில்லாலன் கர்மாவை அழைத்துச்சென்று அரசனிடம் ஒப்படைத்துவிட்டு எனக்கு நாடு தேவையில்லை என்று கூறிவிட்டு ஆச்சிரமத்தை அடைந்தான். இருடன் மலையனுக்கு தகவல் அனுப்பினான். தில்லாலன் வந்து கர்மாவை அழைத்துச்சென்றுவிட்டான் என்ற செய்திகேட்ட மலையன் கோபமடைந்தான். தில்லாலனை அழிப்பதற்காக மலையன் ஒரு அரக்கனை அனுப்பினான். அரக்கன் ஆச்சிரமத்தை அடைந்தான். அங்கு முனிவர் தியானத்தில் இருந்தார். அரக்கன் முனிவரின் தியானத்தைக் குழப்பினான். இதையறிந்த முனிவர் அரக்கனுக்கு சாபம் கொடுத்தார். அரக்கன் அந்த ஆச்சிரமத்தின் அருகே பெரிய மரமாகினான். சிறிது நேரத்தின்பின் தில்லாலன் வந்தான். நடந்தவை கேட்டு மலைத்தொடருக்குச் சென்றான். பின் கடலுக்குச் செல்வதற்கு இருடனிடம் கேட்டால் தெரியும் என்றுவிட்டு அரண்மனைக்குள் புகுந்தான். அரக்கர்கள் பயத்தால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. இருடனுக்கு பயம் பீறிட்டது. கடலுக்குச் செல்லும் வழியைக் கூறினான்.

இருடன் காட்டிய வழியில் தில்லாலன் கடலை அடைந்தான். கடலைப் பார்த்த தில்லாலனின் கண்ணில் ஏதோ ஒரு சிலைபோல காணப்பட்டது. கடலின் மத்தியில் இருக்கும் அந்தச் சிலையைப் பார்க்கப் பறந்துசென்றான். அது சிலையல்ல. இரட்டைத்தலை அரண்மனை என்று பார்த்தபின்பு சந்தேகம் தீர்ந்தது. இதில்தான் மலையன் வசிக்கிறான் என்பதை அறிந்தான். திடீரென்று ஒரு கடற்பாம்பு தில்லாலனை விழுங்க வந்தது. தில்லாலன் பாம்புடன் போரிட்டான் திடீரென்று பாம்பு அரக்கனாக மாறியது. அவன்தான் மலையன் தில்லாலன் மலையனிடம் போரிட்டு அழித்தான். திடீரென்று அந்த அழகான இரட்டைத்தலை அரண்மனையும் இடிந்தது. பின் தில்லாலன் காடு திரும்பினான். அரண்மனையிலே அரசனும் அரசியும் கதைப்பது கர்மாவுக்குக் கேட்கிறது. அந்த ஒரு குழந்தையை காட்டில் விட்டவன் அல்லவா? இதையறிந்த கர்மா காட்டுக்குச் சென்றான் காட்டில் சென்று தில்லாலனிடம் கூறினான். அப்பொழுது முனிவர் அங்கு வந்து "ஆம் தில்லாலன் கர்மா சொன்னது உண்மை. நீ கர்மாவுடன் புறப்படு" இருவரும் அரண்மனைக்குச் சென்று அரசனிடம் நடந்தவற்றைக் கூறினார்கள். அரசன் மகிழ்ச்சியடைந்தான்.

## சிறுவர் அரங்கம்

# துருவன்



# நான் வளர்க்கும் நல்லவன்

வெளியே போனால் முகம் வாடி
வேதனையோடு பார்த்திருக்கும்
வாசல் வரைக்கும் தொடர்ந்து வந்து
வாலை ஆட்டி வழியனுப்பும்
புதிதாய் யாரும் வீடு வந்தால்
வள் வள் எனவே வாய்காட்டும்
வீட்டில் வளர்க்கும் மா டாடு
மேய்ந்தே திரும்ப வழிகாட்டும்
அயல் வீட்டாரின் கோழிகளோ
அண்டையிலுள்ள பூனைகளோ
எதுவந்தாலும் துரத்திவிடும்
எங்கள் வீட்டை அது காக்கும்
நாயென்று அதனை அழைப்பதில்லை
நல்லவன் என்று பேரிட்டே
நாமெல்லோரும் அழைக்கின்றோம்
நமக்கெல்லாம் அவன் நல்லவனே.

-ஜினித்தா-




# வெற்றியைத்தரும் விடாமுயற்சி

குள்ள நரியொன்று பலநாட்களாகப் பட்டினியாக இருந்தது. காடெல்லாம் அலைந்து களைத்துப் போனது. இறுதியாக ஒரு கற்பாறையருகில் ஓய்வெடுத்துக்கொண்டது. இந்த நிலையில் எது கிடைத்தாலும் அதனை உண்பதற்குத் தயாராக இருந்தது.

அப்போது கௌதாரி ஒன்று அதன் கண்களில் பட்டது. அதனருகில் சென்று, "அன்பான கௌதாரியே! எப்போது பார்த்தாலும் உயரமான இந்தக் குன்றிலிருந்து பாடிக்கொண்டிருக்கிறாயே! நீ தூங்குவதில்லையா?" என்று இரக்கமாகக் கேட்டது. அதற்குக் கௌதாரி - "நான் எப்பொழுதும் பாடுவதில்லையே. பாடவேண்டுமென்று விரும்பும்போது தான் பாடுகிறேன்" என்று பதிலளித்தது.

"இல்லை நீ பொய் சொல்கிறாய் என்றது நரி. "நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்'' என்றது கௌதாரி. "நீ தூங்குவது உண்மையானால் ஒருமுறை என் னருகில் வந்து தூங்கிக்காட்டு பார்க்கலாம்'' நரி சொன்ன தைக்கேட்டு கௌதாரி இறங்கி வந்தது. தனது தலையை இறக்கைக்குள் மறைத்துக் கொண்டு தூங்கிக்காட்டியது. இதுதான் தருணமென நினைத்த நரி அதை "லபக்" கெனக் கௌவியது. நரியின் வாய்க்குள் கௌதாரி தத்தளித்தது.



மூடத்தனத்தால் அகப்பட்டதை நினைத்து கௌதாரி வேதனைப்பட்டது. ஆனால் தளர்ந்து போய் விடவில்லை. தப்புவதற்கு முயற்சி செய்தது.

"சகோதரரே! நான் உண்பதற்கு சுவையாக இருக்குமென நினைக்கிறீரா" என நரியை வினாவியது. நரி பதிலேதும் கூறாமல் தலையை மட்டும் ஆட்டியது. கௌதாரிக்கு ஏமாற்றமாகிப் போனது. இருந்தாலும் சளைக்காது கூறியது.

"சகோதரரே! நீ என்னை உண்பது சரி. ஆனால் உண்பதற்கு முன்னர் என்னை முழுமனத்துடன் வாழ்த்திவிட்டு உண்டால்தான் நான் நன்கு சுவையாகவும், செரிமானமாகக்கூடியதாகவும் இருக்கும்'' என்று கௌதாரி கூறியது. நரிக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

சந்தோஷத்தினால் நரி வாயைத் திறந்தது வாழ்த்துவதற்காக. சட்டெனப் பறந்த கௌதாரி ஏளனத்தோடு நரியைப் பார்த்தது. தன் புத்திசாலித்தனத்தினாலும், விடாமுயற்சியாலும் தப்பித்துக்கொண்டதை எண்ணியபடியே கொளதாரி தனது சிறகுகளை அடித்தபடி உயரப்பறந்து கொண்டிருந்தது.

-மாவன்னா-



# உங்கள் கைவண்ணம்






ச.திவாபரன்
தரம் - 04
யா/விசாலாட்சி வித்தியாசாலை



வி.மிதுனா
தரம் - 02
யாழ்.மத்திய கல்லூரி.



யோ.வலன்ரீனா
தரம் - 04
யா/நாவற்குழி ம.வி.







அ.மக்லின்
தரம் - 07
கலட்டி ஆர்.சி.



## சிந்தித்து இடத்தைக் கண்டுபிடியுங்கள்

1. ஒரு பறவையின் பெயரையும், ஒரு மரத்தின் பெயரையும் சேர்த்தால் வருவது?
2. கோயில்களில் ஒலியெழுப்பும் கருவியையும், வீட்டுக்குப் பாதுகாப்பை அளிப்பதற்காக சுற்றி அமைக்கப்படுவதையும் இணைத்துப் பாருங்கள்.
3. மனித உறுப்புகளில் ஒன்றையும், நாரினால் தொடுக்கப்பட்ட பூக்களின் தொகுதியையும் சேர்த்தால் அந்த இடம் யாது?
4. புளிப்புத் தன்மையுடைய கனியையும், நீளத்தை அளப்பதற்குப் பயன்தரும் அலகு ஒன்றையும் சேருங்கள். அப்போது வருமிடம்?
5. முதல் மூன்று எழுத்துகள் ஒரு பூக்கொடியையும், கடைசி இரு எழுத்துகள் கடலால் சூழப்பட்ட நிலப்பரப்பையும் குறிக்கும். அந்த இடம் எது?

**விடைகள்**

1. கிளிநொச்சி
2. சங்குவேலி
3. முகமாலை
4. நெல்லியடி
5. முல்லைத்தீவு


ர.நிந்துஷா
தரம் - 07
யா/மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம்.

## விடுகதைகள்

1. ஊரெல்லாம் ஒரே விளக்கு. அதற்கும் ஒருநாள் லீவு. - அது என்ன?
2. எங்க மாட்டுக்கு மூன்று கொம்பு அது பின்னால் பாயும். - அது என்ன?
3. எங்கள் வீட்டுத் தோட்டத்தில் மஞ்சள் குருவி ஊஞ்சலாடுது. - அது என்ன?
4. எங்கள் அப்பா பணத்தை எண்ண முடியாது. எங்கள் அம்மா புடவையை மடிக்கமுடியாது. - அவை என்ன?
5. எங்கள் தம்பி குள்ளத்தம்பி பந்தடிப்பான், பயிரடிப்பான் நூறு பேரை நொறுங்கடிப்பான். - அவன் யார்?
6. எங்கள் வீட்டுக் கிணற்றிலே வெள்ளிக்கிண்ணம் மிதக்குது. - அது என்ன?
7. எங்க வீட்டு எருமைக்கு வருடம் ஒரு மேய்ச்சல். - அது என்ன?

உலக அதிசயம்

## சாய்ந்த கோபுரம்



உலக அதிசயங்களில் ஒன்றான இத்தாலி நாட்டின் பைசா நகரிலுள்ள சாய்ந்த கோபுரம் பழமை மிக்கது. 8 அடுக்குக் கொண்ட இதன் உயரம் 179 அடிகள் ஆகும். இதனைக் கட்ட 175 ஆண்டுகள் பிடித்தன.

சாய்ந்த நிலையில் உள்ள இந்தக் கோபுரம் நவீன முறையில் அண்மையில் சீர்செய்யப்பட்டது.

ஜெ.ஜெயக்கமலன்
தரம் - 07

## பொது அறிவு

01. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?
திரு.ஆனந்தசமரக்கோன்
02. இலங்கையின் தேசிய மரம் எது?
நாகமரம்
03. இலங்கையின் தேசிய மலர் எது?
நீலோற்பலம்
04. இலங்கையின் தேசிய பறவை எது?
காட்டுக்கோழி
05. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
கரப்பந்தாட்டம்
06. இலங்கையின் புனித மரம் எது?
வெள்ளரசு
07. இலங்கையின் முதற்பெண் பிரதமர் யார்?
திருமதி.ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா
08. இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு எது?
1948.02.04
09. இலங்கையில் உள்ள மாவட்டங்கள் எத்தனை?
09
10. இலங்கையின் சிறப்புப் பெயர் யாது?
இந்துசமுத்திரத்தின் முத்து

ஆ.அபிராமி
தரம் - 03
யா/சுப்பிரமணிய வித்தியாலயம்.

# உங்கள் சிந்தனைக்கு?





1. இந்தியாவிலுள்ள ஒரு சிறிய நகரத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடந்தது. அங்கு 48% ஆண்களும், 42% பெண்களும் மற்றவர்கள் சிறுவர்களுமாக இருந்தனர். மொத்த மக்கள் தொகையில் ஆண் - பெண்களில் 20% முதியோர். முதியோரின் எண்ணிக்கை 2916 எனில் மக்கள் தொகை எவ்வளவு?

2. ஒருவருக்கு சாதாரணமாக 1 மாதத்துக்கு 1 செ.மீற்றர் தலைமுடி வளரக்கூடும். ஒருவர் 3 ஆண்டுகளாக தலைமுடி வெட்டவில்லையெனில், அவர் முடி எத்தனை மீற்றர் வளர்ந்திருக்கும்?

3. ரூபாய்க்கு 0.51 வீதம் ரூபா 10,000 இற்கு வரி என்ன?


4. காலியான கட்டங்களை நிரப்புக?







படத்தில் இருப்பவை டாமிக்குப் பிடித்தமான எலும்புத் துண்டுகள். எத்தனை எலும்புத் துண்டுகள் இங்கு உள்ளன கூறுங்கள்.


உடைந்த பகுதியில் பொருத்தக்கூடிய துண்டு எது?




படத்திலிருக்கும் 5 மீன்களும் பார்ப்பதற்கு ஒன்று போல் இருந்தாலும், இவற்றுள் ஒரே ஒரு மீன் மட்டும், மற்ற மீன்களில் இருந்து சற்று வேறுபட்டுள்ளது. அந்த மீன் எது? அது எப்படி அவற்றிலிருந்து வேறுபட்டுள்ளது?




கேள்விக்குறியிட்ட இடத்தில் எந்த டிசைன் வரவேண்டும்?




இந்த உடைந்த சுருளில் உள்ள கறுப்புத் துண்டுகள் எத்தனை? வெள்ளைத் துண்டுகள் எத்தனை?





## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
..............................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர் / ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## எதிலும் பயன் பெற...

இன்று வீடுகளில் நிறையக் கலண்டர்களைத் தொங்க விடுகிறார்கள். இதற்காக ஆலாய்ப் பறந்து. இலவசமாகக் கொடுக்கும் இடங்களிலெல்லாம் கலண்டர் வாங்க முண்டியடிப்பார்கள். "திகதி பார்க்கத்தானே கலண்டர். ஒன்று போதுமல்லவா?" என்று திருப்திப்படுபவர்கள் இன்று இல்லையென்றே சொல்லலாம். இப்படித் தொங்கவிடுவதற்கு பல கலண்டர்களைச் சேகரித்தாலும், யாரிடமாவது தான் "இன்றைக்கு என்ன திகதி?" என்று கேட்பார்கள்.



இப்படியான நிலையிலிருந்து நாம் மீளவேண்டும். காசு கொடுத்தேனும் நல்ல விடயங்கள் உள்ளடக்கப்பட்ட கலண்டர்களை வாங்குவார்கள். சாதாரணமாக ஒவ்வொரு நாளுக்குரிய தாள்களிலும் திருக்குறள் வரிகள் பதிக்கப்பட்டிருக்கும். படிக்கின்ற மாணவர்கள் ஒவ்வொரு நாட் காலையிலும் இந்தத் தாளைக் கிழிக்கும்போது அதிலுள்ள குறளை மனனம் செய்யலாமல்லவா? கிழித்ததை எறிந்துவிடாமல் சட்டைப் பையினுள் வைத்துக்கொண்டால்கூட மறந்துபோகும் வேளைகளில் ஞாபகப்படுத்திக்கொள்ள வசதியாயிருக்கும்.

எதிலிருந்தாவது பாடங்களைக் கற்றுக்கொள்ள, பயனைப் பெற்றுக்கொள்ள நாம் எம்மைத் தயார்ப்படுத்துவோம். இது எமது எதிர்கால வாழ்வின் ஏணிப்படியாகி உதவும்.

- கிருபா-

## வருமுன் காப்பவன் அறிவாளி

காட்டுவழியாக வந்த நரியொன்று பன்றியைக் கண்டது. அந்தப் பன்றி அருகிலிருந்த மரக்கட்டையில் தனது பற்களை உராய்ந்து தீட்டிக்கொண்டிருந்தது.

அதைக் கவனித்த நரி, பன்றியாரே! உமக்கு எதிரிகளென்று இங்கு யாருமில்லையே! எதற்காக




உனது பற்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறாய்" எனக் கேட்டது.

"அன்பரே! எனக்கு இங்கே எதிரிகளென்று யாருமில்லைத்தான். ஆனால் எனக்கு இப்போது போதிய நேரமிருக்கிறது. அதனால்தான் ஓய்வானபோது பற்களைக் கூர்மையாக்குகிறேன். எதிரிகள் வரும்போது அவர்களுடன் சண்டைபோடத்தான் நேரமிருக்கும். அப்போது இதைச் செய்யமுடியாது. "வருமுன் காப்பதே அறிவுள்ளவன் செயல் என் பதை நீர் அறிய வில்லையா? என்று ஏளனத்தோடு கேட்டது பன்றி.

நரி தலையைத் தொங்கப்போட்டபடி சென்று கொண்டிருந்தது.

ஈழநாடு சிறுவர் அரங்கம் 17.09.2005 - சனிக்கிழமை - பக்கம் 07


குறும்புக்கார பாலு...
அப்பா... வசந்தம் வந்து விட்டது. புல்வெளி பச்சைப் பசேலென்றாகி விட்டது... அழகான பூக்கள்... அருமையான வெளிச்சம்... ஆஹா...
வேறொரு காட்டிலிருந்து பாலுவின் நண்பர்கள் வந்தார்கள்.
ஹேய்... எப்படி இருக்கிறாய்?
வ ண க்க ம் . . . வருக... வருக...!
பாலுவும் அதன் தாயும் விருந்தினர்களாக உபசரித்தார்கள்.
அருமையான சாப்பாடு... சுவையோ... சுவை!
பாலுவின் நண்பர்கள் அவனது காட்டைப் பார்க்கவிரும்பினர்.
எங்கள் காட்டைப் பார்க்க விரும்புகிறீர்களா? மகிழ்ச்சி. வாருங்கள் போகலாம்.
பாலு அவர்களைக் காட்டுப் பக்கம் கூட்டிச் சென்றான்.
எனக்கு எங்கள் காட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கும் நன்றாகத் தெரியும்... பயப்படாமல் வாருங்கள்...
அவன் அப்படிச் சொல்லிமுடிக்க முன்னரே ஒரு நீண்ட மரவேரில் தடுக்கி விழுந்தான்.
ஓ... ஐயோ! செத்தேன்...!
அவன் தடுமாறி விழுந்த கோலம் நண்பர்களுக்கு சிரிப்பையூட்டியது...
பாலு உடன் எழுந்து சமாளிக்க முயன்றான்.
அதொன்றுமில்லை... சிலவேளை அப்படித்தான் நடக்கும். தெரியும்தானே! வாருங்கள்...
பாலு வேறு பாதையால் அவர்களைக் கூட்டிச்சென்றான் ஆனால் திடீரென ஒரு புலி அவ்வழியே வர...
ஓடு... ஓ... டு... ஓ...
அவர்கள் ஒருவாறு தப்பி ஓடினர்
நாம் வீட்டுக்குப் போகலாம்
ஐயோ இனி நான் வரவே மாட்டேன்...!
உன் காடும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் தப்பினால் போதும்.
அடுத்த கணமே... பாலு காட்டுக் குழி ஒன்றுள் பொத்தென வீழ்ந்தான்.
ஐயோ! காப்பாற்றுங்கள்...!
குழியின் அடியில் வீழ்ந்துகிடந்து பாலு கத்தினான்.
ஐயோ... பாவம்... இனி என்ன செய்வது?
அவனது நண்பர்கள் அவனை ஒருவாறு காப்பாற்றினார்கள்.
கவலைப்படவேண்டாம்... உனக்கு வழி தெரியாவிட்டால் பரவாயில்லை. நாங்கள் உன்னைப் பாதுகாப்பாக வீட்டுக்குக் கூட்டிச்செல்வோம். வா போகலாம்...!

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

படைகளின் படையெடுப்பைத் தடுக்கலாம். ஆனால், சரியான தருணத்தில் தோன்றும் ஒரு யோசனையைத் தடுக்க முடியாது.

## நமது நோக்கு

### ஜனாதிபதியின் நியூயோர்க் பேச்சும்; அது குறித்த சில கருத்துக்களும்!

கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வதில் என்ன பயன் என்று ஒரு தமிழ்ப் பழமொழி கூறுவதன் அர்த்தம் ஆழமானது. ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் நியூயோர்க்கில் ஆசிய சமூகத்தவர்கள் மத்தியில் 'பாரிய அளவிலான சுதந்திரம், இலங்கையில் சமாதான முன்னெடுப்பு' என்ற தலைப்பில் உரையாற்றும்பொழுது கூறிய கருத்துக்கள் மேற்குறித்த பழமொழிக்கு பொருத்தமானவையாக அமைந்துள்ளது என்றே கூறவேண்டும்.

நிலையான சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கத் தரப்பிலிருந்தும், விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்தும் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்துவதே இன்று இலங்கை எதிர்நோக்கும் இரட்டைச் சவால் என அங்கு தெரிவித்த ஜனாதிபதி - இந்த மாற்றத்தை தனியான ஒரு கட்சியால் ஏற்படுத்த முடியாதெனவும், இதற்குப் பிரதான கட்சிகள் மற்றும் குழுக்களின் கூட்டுச் செயற்பாடும், பரந்த அளவிலான கருத்தொருமைப்பாடும் தேவை எனவும் கூறியுள்ளார்.

யுத்தம் விருப்பத்துக்குரிய தேர்வல்ல எனக் குறிப்பிட்டுள்ள அவர் - புலிகளுடன் பேச்சுவார்த்தையை மேற்கொண்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும், சமஷ்டி முறையிலான தீர்வு வடிவமைக்கப்படவேண்டும் என்பதே இரு பிரதான கட்சிகளாலும் இணக்கம் காணப்பட்ட விடயமாகும் எனத் தெரிவித்ததுடன், அரசாங்கத்தில் நாம் மாற்றத்தை ஏற்படுத்தவேணடிய தேவையுள்ளது. சகல சமூகங்களினதும் கவலைகள், கரிசனைகளை சம அளவில் வெளிப்படுத்துவதாக அரசியலில் மாற்றம ஏற்படவேண்டும். ஒற்றையாட்சி முறையிலிருந்து பன்முகத்தன்மையும், சமஷ்டி முறைமையையும் கொண்டதான அரசியல் மாறறம் ஏற்படவேண்டும் என்பதே தனது கருத்து என்று மிகவும் உரத்து தனது குரலை ஒலிக்கவைத்துள்ளார்.

உள்நாட்டில் ஏற்படாத - அதிகார வலுக்கொண்ட ஆட்சியதிகாரத்தில் சகலதையும் நிறைவேற்றும் வல்லமைகொண்ட ஒரே நபராக ஒரு தசாப்தகாலம் பதவியில் இருந்தபோது ஏற்படாத... [illegible]ம், கருத்துகளும் பதவியிலிருந்து அகலவேண்டிய காலம் அண்மித்துக்கொண்டிருக்கும் அரசியல் அஸ்தமன சூழலில அமெரிக்காவில் வைத்து அவருக்கு ஏற்பட்டது - அதிசயமான சுடலை ஞானச் சிந்தனையாகவே எண்ணத்தோன்றுகிறது.

1995 இல சகல வல்லமைகொண்ட மக்களின் முழுமையான-சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஆணையைப் பெற்று நாட்டின் ஆட்சித் தலைவியாக அதிகாரபீடத்தில் அமர்ந்தபோது அவரின் முன்னிலையிலிருந்த பெரும் பொறுப்பாக சமாதானத்தை உறுதிப்படுத்தலே இருந்தது.

மக்கள் முழுமையாக அவரை அதனைச் செய்யும் திறன் கொண்ட, மாறுதலான சிந்தனைகொண்ட சிங்கள அரசியல் தலைவராகவும் நம்பினார்கள் என்றே கூறவேண்டும்.

இபபோது சமஷ்டி, அதிகாரப் பரவலாக்கம், அரசியல் மாற்றம என்றெல்லாம அமெரிக்காவில் 'வேதம் ஓதும்' அவர் அப்போதும் இதனை உச்சரிக்கவே செய்தார். உள்ளத்துணர்வோடு ஒன்றாது உதடுகள் மட்டும் உச்சரித்த வார்த்தைகள் அவையாகும்.

'பேச்சுப் பல்லக்கு தங்கச்சி கால்நடை' என்பதுபோல்தான் அவரது நடைமுறைகள் அப்போது மாறியபோது, தான் பண்டாரநாயக்க பரம்பரையின் பௌத்த சிங்கள பேரினவாதக் குணாம்சம் மாறாத வாரிசுதான் என்பதை இனங்காட்ட ஆரம்பித்தார்.

அப்போது 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற தேர்வை மேற கொண்ட அதே ஜனாதிபதிதான் இப்போது சமாதானத்துக்கான சமஷ்டித்தீர்வு பற்றி அமெரிக்காவில் நின்று பேசுகிறார்.

உண்மையில் இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணக்கூடிய முழுமையான - அதிகாரபூர்வமான வாய்ப்பானது ஜனாதிபதி சந்திகாவுக்குக் கிடைத்ததைப் போன்று வேறு எவருக்கும் கிடைத்தது கிடையாது .

ஒரு தசாப்தத்தின் முன்னர் மக்கள் கொடுத்த அற்புதமான வாய்ப்பையும், அதற்கு விடுதலைப்புலிகள் வழங்கிய வெளிப்படையான ஒத்துழைப்பையும் பயன்படுத்தத் தவறி வரலாற்றுப் பிழையொன்றை தனக்குரியதாக்கிக்கொண்டவர் இதே ஜனாதிபதிதான்.

அப்போது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விருப்பார்வம் அவருக்கு ஆத்மார்த்தமாக இருந்திருப்பின் சமாதானத்துக்கான யுத்தம் என்ற ஏழாண்டுத் துயரத்தை இந்த நாட்டு மக்கள சந்தித்திருக்கமாட்டார்கள்.

ஏன், கடந்த ஐக்கிய முன்னணி அரசு மேற்கொண்ட சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி சமஷ்டித் தீர்வொன்றை ஏற்படுத்த அவர் முன்வந்து ரணிலுக்கு ஒத்துழைப்பை வழங்கியிருந்தால்கூட சமாதான முயற்சிகள் இறுக்கமடைந்திருக்கும்.

இடைக்கால நிர்வாக சபையையே ஏற்க மறுத்து அதனை எதிர்த்து ஜே.வி.பியுடன் கூட்டணி அமைத்து அந்த ஆட்சியைக கலைத்தவர் - இப்போது சமஷ்டித் தீர்வு குறித்து அமெரிக்காவில் நின்று பேசுவது நகைப்புக்கிடமான விடயமேயாகும்.

தனது ஆட்சி அதிகாரம் கொடிகட்டிப்பறந்த காலத்தில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை கதிர்காமரைப் பயன்படுத்தி உலகெங்கும் பயங்கரவாதப் பிரச்சினையாக பிரசாரம் செய்துவிட்டு, இப்போது அதே கதிர்காமர் சமஷ்டித்தீர்வில் நம்பிக்கைகொண்டிருந்தார் எனக் கதைவிடும் ஜனாதிபதி அவர்கள், பதவி பறிபோகும் நிலையில் சமாதான சங்கீதம் பாட முயல்வது அபஸ்வரமாகவே ஒலிக்கிறது.

பதவிக்கு வரும்போது சமாதான தேவதையாக தன்னை இனஙகாட்டி பரபரப்பை ஏற்படுத்திய ஜனாதிபதி, பதவியை விட்டு அகலும் போதும் சமாதானப் புறா போன்று தன்னைக் காட்டிக்கொண்டு பறக்கமுயல்கிறார் என்பதே உண்மை.

ஆனால், வரலாறு அவர் சமாதான முயற்சிகளுக்குச் செய்த துரோகத்தையும், காட்டிய எதிர்ப்பையும் ஆழமாக பதிவு செய்து வைத்துள்ளதை புரிந்துகொள்வதும் அவசியமாகும்.


267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com



தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும்.

*- தியாக தீபம் லெப்.கேணல் திலீபன்-*

**நாடும் நடப்பும்**




**'ஊர்சுற்றி' யார் பார்வையில்...**

# ஐ.நாவில் அம்மையாரின் சமஷ்டியும் ஜோர்ஜ் புஷ்ஷின் அறிவுரையும்!

காலம் மாறிய மாற்றத்தைப் பார்த்தீரா? நாட்டின் நாடாளுமன்றத்துக்குள்ளேயே சமஷ்டி என்ற வார்த்தையை தமிழ்ப் பிரதிநிதிகள் சொன்னால், பிரிவினைவாதிகள் என்று கூச்சல் போட்டுப் பெரும்பான்மைச் சிங்களப் பிரதிநிதிகள் அடக்கிவிடுவார்கள். இன்று இலங்கை ஜனாதிபதியே உலக அரங்கான ஐ.நா.சபையில் சமஷ்டி அமைப்பினால்தான் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியும் என்று சொல்லுமளவுக்குக் காலத்தை மாற்றி வைத்திருக்கிறார்கள் விடுதலைப் புலிகள் என்று சொல்லிக்கொண்டே வந்தார் நண்பர் பரமசிவம்.

இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிதான் பொருத்தம் என்று சந்திரிகா அம்மையாரின் அப்பன் பண்டாரநாயக்க லண்டனில் படிப்பை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் முதலில் சொன்னார். பின்னர், அரசியலில் தலையெடுப்பதற்காக அவரும் சமஷ்டியைப் பிரிவினை என்று கூறினார். 1958ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக பண்டாவின் அரசின் ஆதரவுடன் இனக்கலகம் தூண்டிவிடப்பட்டுத் தமிழர்கள் அகதிகளானார்கள். இந்தச் சமயத்தில் சமஷ்டி ஆட்சியே இலங்கைக்கு ஏற்றது என்று இந்தியாவின் ராஜரிஷி ராஜாஜியும் சொன்னார்.

ஆனாலும், 1949ஆம் ஆண்டிலிருந்து சமஷ்டி ஆட்சிக்காக காந்திய வழியில் தந்தை செல்வா தலைமையில் தமிழ் மக்கள் சாத்வீகப்போராட்டம் நடத்தி வந்தபோது, நாட்டைப் பிரிக்கும் செயல் என்று சிங்களப் பேரினவாதம் தமிழர்களை ஆயுதப்பலம் கொண்டு அடக்கி ஒடுக்கியது. 1976ஆம் ஆண்டில் தந்தை செல்வா தலைமையில் தமிழ்த் தலைவர்கள் ஒன்றுகூடி இனி இழந்த தமிழீழ அரசை மீண்டும் அமைப்போம் என்று தீர்மானம் நிறைவேற்றினார். இப்போதும் நாட்டைப் பிரிக்க அனுமதிக்க முடியாது என்று கூச்சலிட்ட சிங்களப் பேரினவாதிகள், இனக்கலகங்களைத் தூண்டிவிட்டு, இனப்படுகொலைகளைக் கட்டவிழ்த்துவிட்டனர்.

இதைத் தடுத்துத் தமிழ் மக்களையும், தமிழ் மண்ணையும் பாதுகாப்பதற்கு தமிழ் இளைஞர்கள் தம்பி வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் ஆயுதம் ஏந்திப் போராடினர் என்று நான் சொன்னேன்.

சாத்வீகப் போராட்டத்திலும், ஆயுதப் போராட்டத்திலும் ஆயிரக் கணக்கில் தமிழ் இளைஞர்களும், பொது மக்களும் தங்கள் உயிர்களைப் பலிகொடுத்து இன்றும் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில்தான் சமஷ்டி ஆட்சிமூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வந்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் உலக அரங்கில் பேசியிருக்கிறார். இது மட்டுமல்ல, இதற்காகத் தாம் குரல் கொடுத்து வந்திருப்பதாகவும் பொய்யும் சொல்லியிருக்கிறார் என்று பரமசிவம் சொன்னார்.

இதுமட்டுமல்ல, உலக அரங்கில் சமஷ்டி ஆட்சியே தீர்வு என்று ஜனாதிபதி பேசிய அதேசமயம், நாட்டின் பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி அமைப்புக்குள்ளேயே தீர்வுகாணப்படவேண்டுமென்று இரண்டு இனவாத அரசியல் அமைப்புக்களுடன் ஒப்பந்தம் செய்து அடுத்த ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டுப் பிரசாரம் செய்துகொண்டிருக்கிறார் என்று நான் சொன்னேன்.

இலங்கையில் நாம் திடமாக எதிர்கொள்ளும் இரண்டு சவால்கள் என்று சந்திரிகா அம்மையார் தமது உரையில் குறிப்பிட்டிருந்தார். ஒன்று சமஷ்டி ஆட்சி அமைப்பைக் கொண்டுவருவது, மற்றது மஹிந்த கூட்டுச் சேர்ந்திருக்கும் இனவெறிக் கட்சிகளுடன் ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்ற ஒப்பந்தம் பற்றியது என்று அம்மையார் சொல்லவில்லை என்று பரமசிவம் சொன்னார்.

"இலங்கை நாட்டை ஒற்றையாட்சியிலிருந்து சமஷ்டி முறைக்குள் மாற்றுவதன் மூலம் தமிழ் சமூகத்தையும், முஸ்லிம் சமூகத்தையும் அதற்குள் கொண்டுவரமுடியும். ஆனால், அது மட்டும் நிரந்தரமான தீர்வைக் கொண்டு வந்துவிடாது.

சமாதானத்தை எட்டுவதற்கு அதேயளவுக்கு இரண்டாவது விடயத்துக்கும் சவால்களைப் புறக்கணித்து - நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அது பயங்கரவாதத்தையே தவறாமல் பின்பற்றுகின்ற - சர்வாதிகார கொடூரப் போக்குடைய குழுவான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அதன் தரப்புக் கருத்துக்கள் செவிமடுக்கப்படுவதற்கு வன்முறையை நாடாமல், நாட்டோடு தொடர்புபடக்கூடிய அரசியல் சக்தியாக மாற்றுவதாகும்" என்று இரண்டாவது அம்சமாக அம்மையார் கூறியிருக்கிறார் என்று சொன்னேன்.

அம்மையார் சொல்லுகின்ற சமஷ்டி அம்சத்தைத்தானே தந்தை செல்வா தலைமையில் தமிழ் மக்கள் கால் நூற்றாண்டுக்கு மேல் பின்பற்றிவந்தார்கள். அப்பொழுது தமிழ் மக்களுக்கெதிராக அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்படாமல் அமைதியாகத் தீர்வுகாணப்பட்டிருக்கலாமே.

அரச பயங்கரவாதத்தைத் தடுப்பதற்காகத் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடியதால்தானே இன்று சமஷ்டி ஆட்சி என்று உலக அரங்கிலேயே அம்மையார் சொல்வதற்கு முன்வந்திருக்கிறார். இதேசமயம், அம்மையார் புலிகள் பயங்கரவாதத்தைப் பின்பற்றுவதாகச் சொல்கிறார். இதற்கு இதே உச்சி மாநாட்டில் உலகப் பயங்கரவாதத்தை அழித்து ஒழிக்க அறைகூவல் விடுத்துப் புறப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் சொல்லியிருப்பதையும் அம்மையாருக்கு நினைவூட்டுவது நல்லது.

ஆயுதங்களின் பலத்தினால் மாத்திரம் பயங்கரவாதத்தை தோற்கடிக்கமுடியாது. ஒடுக்கப்படுபவர்கள் ஆயுதமேந்துவதற்கு வழிவகுத்த சூழ்நிலைகளை இல்லாதொழிக்கவேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஈராக்கில் அனுபவப்பட்டபின் கூறியிருக்கிறாரென்று சொல்லலாம்.

அம்மையாரும் அனுபவப்பட்டபின் சமஷ்டிக்கு வந்திருக்கிறார். ஆனால், அம்மையார் கடை சிக் கட்டத்தில் பெற்றிருக்கும் ஞானம் இது. எதிர்வரும் டிசம்பருடன் அம்மையார் ஆட்சியிலிருந்து இறங்கி ஓய்வு பெற்றுவிடுவார். இவருக்குப்பின் ஆட்சிக்கு வருவதற்கென்று இவரால் தயார்படுத்தப்பட்டு இவரது கட்சி வேட்பாளராக இவரால் நியமிக்கப்பட்ட மஹிந்த ஒற்றையாட்சியால்தான் பிரச்சினைக்குத் தீர்வு என்று நிற்கிறார். இவர் கூடா நட்புடன் சேர்ந்திருக்கிறார்.

மஹிந்தவுடன் போட்டிக்கு நிற்கும் ரணில், சமஷ்டி ஆட்சி என்று சொல்கிறார். இலங்கையில் எந்தத் தலைவராவது நிலையான கொள்கையைப் பின்பற்றிய வரலாறுண்டா? அம்மையார் உலக அரங்கில் சமஷ்டி பற்றிச் சொல்லியிருக்கலாம்.

இது நடைமுறைக்கு வரக்கூடியதா? நம்பகத்தன்மையுள்ளதா? 1976ஆம் ஆண்டிலேயே தந்தை செல்வா வாழ்ந்துகொண்டிருக்கையிலேயே சமஷ்டி இனி இலங்கைக்குச் சரிவராது என்று கைவிட்டு, இழந்த தமிழீழ அரசை மீண்டும் அமைப்பதற்கு நாடாளுமன்றத்திலேயே பிரேரணை கொண்டுவந்து, அது சபையின் ஒழுங்குப் பத்திரத்திலேயும் இடம்பெற்றிருந்தது. இதுமட்டுமல்ல, 1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழர் கூட்டணிக்கு மக்கள் இதையே ஆணையாகவும் அளித்தனர் என்பதை சந்திரிகா அம்மையாருக்கு நினைவூட்டுவதும் இப்போது அவசியம்!

சமஷ்டியை ஐம்பதாண்டுகள் கழித்து ஏற்றது போல் தமிழீழத்தை ஏற்பதற்கும் மேலும் ஐம்பதாண்டுகளை வீணாக்கவேண்டாம். இப்போதே ஏற்றுக்கொள் வது எல்லோருக்குமே நல்லது என்று சொல்லி நடந்தார் பரமசிவம்.



# போலித்திரை கிழித்த பேரியற்கை கத்ரீனா சூறாவளி



**பே**ரியற்கைப்புதிர் மானிட அறிவெல்லைகளுக்குள் அகப்படாது; அவிழ்படாது என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்து விட்டுப் போயிருக்கிறது. அதுவும் விஞ்ஞான வளர்ச்சியின் உச்சத்தில் நின்றபடி வான்வெளி ஏவுகணை தடுப்புத் திட்டம் , விண்வெளி ஆய்வுகள் என்று பில்லியன் கணக்கான டொலர்களைக் கொட்டி உருவாக்கும் அமெரிக்காவின் மடியிலேயே கைவைத்திருக்கிறது. இயற்கை அழிவுகள் மிக அதிகமாக நிகழ்ந்து வரும் இன்றைய உலகில் - அச்சே மாகாண விவசாயிகளோடும், இலங்கைக் கரையோர மீனவர்களோடும், ஈரானின் குடியானவர்களோடும்

**உலகின் மிகப்பலமான தொழிநுட்ப வல்லாண்மையுடைய நாட்டின் குடிமக்கள் என்ற அந்த மக்களின் நம்பிக்கை அவர்களைக் காப்பாற்றத் தவறிவிட்டது. இந்த நிலையில் பல போலித்திரைகளைக் கிழித்து நிஜமான அமெரிக்காவை கத்ரீனா உலகுக்குக் காட்டியிருக்கிறது என்கின்றனர் பல ஆய்வாளர்கள்.**

**தா.விவேகானந்தன்**

வெயிற்றியின் சேரிச்சனங்களோடும் சூறாவளி கத்ரீனாவால் பாதிக்கப்பட்ட அமெரிக்க மக்களும் இணைந்து கொள்கின்றனர்.

கத்ரீனா இனிமையான பெயரைத் தாங்கி, அமெரிக்காவின் கிழக்குக்கரை மாநிலங்களில் இடியென இறங்கிய புயற்காற்று இது. கத்ரீனா கடந்து சென்று மூன்று வாரங்களுக்கு மேலாகிவிட்ட நிலையில் - அது வெளிக்கொணர்ந்திருக்கும் உண்மைகள், கிளப்பிவிட்டிருக்கும் வாதப்பிரதிவாதங்கள், வொஸிங்டனில் அது உருவாக்கிவிட்டிருக்கும் அரசியற் சூறாவளி, அமெரிக்க வல்லாண்மை பற்றி உலகில் ஏற்பட்டிருக்கும் புருவ உயர்தல்கள் என உலகமே பரபரப்பாகி இருக்கிறது.

லூசியானா, மிசிசிப்பி, அலபாமா என மூன்று மாநிலங்களை கத்ரீனா கடுமையாகத் தாக்கியிருந்தாலும், லூசியானாவின் நியூஓர்லியன்ஸ் நகரமே மிகக் கடுமையான பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது. இந்தக் கட்டுரை நியூஓர்லியன்ஸ் நகரின் அழிவுகளை, அதன் பின்னணியை, அழிவின் மூலங்களை அழிவின் பின்னாலே தொக்கி நிற்கிற கேள்விகளை சமூக மற்றும் இயற்கை பற்றிய பார்வை ஊடாக அலச முற்படுகிறது.

நியூஓர்லியன்ஸ் அமெரிக்காவின் தேசிய உளப்பாங்கில் மிக முக்கியமான இடம் வகிக்கிற ஒரு நகரம். பிரெஞ்சு,ஸ்பானிய, கறுப்பின பண்பாடுகளின் சங்கமத்தால் உருவான தனித்துவமான பண்பாடு அதனுடையது. ஜாஸ் இசையும், (b) புளூ இசையும், கிறியோல் சமையலும், கேயுன் சமையலும், ஏரிகளின் இயற்கை வனப்பும் சூதாட்டமும் என்று,இயந்திர மயமான அமெரிக்காவின் பெருநகர பண்பாட்டுக்கு முற்றிலும் மாறுபட்டதான வாழ்வியல் அதனுடையது. 'கவலை என்ற வார்த்தை மறந்து போன நகரம்' என்பது இதன் செல்லப்பெயர். இந்த நகர மக்களின் தாரக மந்திரமே "ஆனந்த நேரங்கள் ஆரம்பமாகட்டும்' (Let the good times roll-Laissez Le Bon Temps Rouler ) என்பது தான். உண்மையில் நியூஓர்லியன்ஸ் மக்கள் வாழ்க்கையை மிக இலகுவாக எடுத்துக் கொண்டவர்கள். நான்கு வருடங்களுக்கு ஒரு முறை ஒலிம்பிக் வருவது போல், உலகக் கிண்ண உதைபந்தாட்டம் வருவது போல், முறைவைத்து சூறாவளிகள் உரசிப் போவதும், 13-14 வருடங்களுக்கு ஒருமுறை நேரடியாகத் தாக்குவதும் இவர்களுக்குப் பழகிப் போன ஒன்று. இதற்கு முன்னும் சூறாவளி (b) பெற்சி வந்தது. சூறாவளி கமீல் வந்தது. கத்ரீனாவுக்கு மட்டும் நியூஓர்லியன்ஸ் கதிகலங்கிப் போனது ஏன்? நேற்று வரை இசையும், மதுவும நிரம்பி வழிந்த நகரம் இன்று நீரில் மூழ்கி இருள் மூடியது ஏன்? கேள்விகளுக்கு விடைகாண நகரின் புவியியலமைவு, வரலாறு, சமூகக்கட்டமைப்பு என்பனவற்றைத் தொட்டுச் செல்ல வேண்டியிருக்கிறது.

1700ஆம் ஆண்டுகளில் பிரெஞ்சு வர்த்தகர் ஒருவரால் மிசிசிப்பி நதியின் கழிமுகம் ஒன்றின் மீது அமைக்கப்பட்ட நகரம், நியூஓர்லியன்ஸ். ஏராளமான களப்புகளும், சதுப்பு நிலங்களும், சிற்றோடைகளும் நிறைந்த நகரின் தென்கரையில் மிசிசிப்பி நதியும், வடகரையில் பொன்சாற்றைன் ஏரியும் எல்லைகளாக நிற்க - இரண்டுக்கும் நடுவே பிறை வடிவில் நீண்டிருக்கிறது. 87 வீதமான நகரப் பகுதி கடல்மட்டத்திலிருந்து 1-10 அடிவரை தாழ்ந்தே அமைந்திருக்கிறது. கற்பனை செய்து பாருங்கள் வெளியில் இருபக்கமும் நீர் நிறைந்து நிற்கும் ஒரு குண்டுச்சட்டியை, சட்டியில் ஒரு பக்கம்தானும் ஓட்டை விழுந்தால் நீர் உள்நுழைந்து சட்டியை நிரப்பி விடுமல்லவா!. அது போன்றே நியூஓர்லியனஸ் நகரின் நிலையும். இன்னுமொரு துயரமான யதார்த்தம் நகரின் சனத்தொகையில் 67 வீதமான கறுப்பின மக்களில் பெரும்பாலானோர் இத்தாழ் நிலப்பகுதியிலேயே குடியிருந்தனர்.

இப்போது இந்தத் தகவல்களை எல்லாம் இணைத்துப் பார்க்கும் போது, கத்ரீனாவின் பேரழிவுக்கான மூலங்கள் பற்றிய முடிச்சுக்கள் அவிழ்படலாம். உண்மையில் நியூஓர்லியன்ஸுக்கு வந்த இந்த சோகம் முழுக்க முழுக்க கத்ரீனாவால் ஏற்பட்டதல்ல. கத்ரீனா ஆகஸ்ட் 29ஆம் திகதி வந்தது, சுழற்றி அடித்தது, சென்று விட்டது. அதனால் பெரிதாக இழப்புகள் இல்லை. மக்களும் அலட்டிக் கொள்ளவில்லை. 'ஆனால், 24 மணி நேரம் கடந்த பின்பு நடந்ததோ, இந்த நகரின் மக்கள் எதிர்பார்த்திராத ஒன்று. மிசிசிப்பி ஆற்றின் தடுப்புச்சுவர்களிலும், ஏரியின் அணைக்கட்டுக்களிலும் ஏற்பட்ட உடைப்புகளால் நீர் சத்தமின்றி உட்புகுந்து, ஆக்கிரமித்து விட்டது.

உலகின் மிகப்பலமான தொழிநுட்ப வல்லாண்மையுடைய நாட்டின் குடிமக்கள் என்ற அந்த மக்களின் நம்பிக்கை அவர்களைக் காப்பாற்றத் தவறிவிட்டது. இந்த நிலையில் பல போலித்திரைகளைக் கிழித்து நிஜமான அமெரிக்காவை கத்ரீனா உலகுக்குக் காட்டியிருக்கிறது என்கின்றனர் பல ஆய்வாளர்கள்.

ஈராக்கின் போர் யானைக்கு தீனி போட இருக்கின்ற வளங்கள் திசை திருப்பப்பட்டன. உள்நாட்டுப் பாதுகாப்புக்கான ஆட்பலம் மெலிவடைந்தது. உதாரணமாக - லூசியானா மாநிலத்தின் நஸ்னல் காட்ஸ் என்ற பாதுகாப்புப்படையின் மூன்றிலொரு பகுதியினர் கத்ரீனா ஏற்பட்ட சமயம் ஈராக்கில் பணிபுரிந்து கொண்டிருந்தமையே தான் மீட்புப் பணிகள் தாமதப்படக் காரணமாய் அமைந்தது என ஒரு விமர்சனம் முன்வைக்கப்பட்டதை இங்கு குறிப்பிடலாம். வரவு - செலவுத் திட்டத்தின் பெரும்பகுதி பாதுகாப்புச் செலவினங்களுக்குப் போக உள்நாட்டின் முக்கிய வளர்ச்சித் திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டன. அதில் ஒன்று தான் நியூஓர்லியன்ஸ் நகரின் அணைகளைப் பலப்படுத்தும் திட்டம். ஆய்வுகள் நியூஓர்லியன்ஸ் நீரில் மூழ்கும் அபாயம் குறித்து எதிர்வு கூறி இருக்கின்றன. Scientific American சஞ்சிகை தனது ஒக்ரோபர் 2001 இதழில் 'நீரில் மூழ்கும் நியூஓர்லியன்ஸ்' (Drawning New Orleans) என்ற தலைப்பில் இவ்வாறு எழுதுகிறது. 'பெரிய சூறாவளி ஒன்று ஏற்படின் நியூஓர்லியன்ஸ் 20 அடி நீருள் மூழ்கும். ஆயிரக்கணக்கான மக்கள் இறப்பர். மிசிசிப்பி நதியின் கரைகளில் மனித அபிவிருத்தி நடவடிக்கைகள் இந்த ஆபத்தை மிகக்கடுமையாக உயர்த்தியுள்ளன'. நஸனல் ஜியோகிராபிக் சஞ்சிகை (National Geographic) தனது ஒக்ரோபர் 2004 இதழில் 'நீரோடு போனது' (Gone with the water) என்ற தலைப்பில் இத்துயரை எதிர்வு கூறியிருக்கிறது. லூசியானாவின் பிரதான செய்தி இதழான Times piccayune யு,ன் 23-27- 2002 ஆம் ஆண்டில் இந்த அபாயம் குறித்து, ஐந்து பகுதிகளாக ஒரு தொடர் கட்டுரையைத் தந்திருக்கிறது. இப்படிப் பலதரப்பாலும் எதிர்வு கூறப்பட்ட விடயம் நிகழ்ந் தேறியிருப்பது எத்துணை கொடுமையானது. செப்ரெம்பர் 11 இரட்டைக் கோபுரத் தாக்குதலின் நான்காவது நினைவு தினத்தின் பகைப் புலத்திலே, அமெரிக்கா வின் உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்த தீவி ரமான கேள்விகளை கத்ரீனா எழுப்பியிருக் கிறது. பல மில்லியன் டொலர்கள் செலவில் உருவான பேரழிவு முகாமைத்துவக் கட்டமைப்பு, நியூஓர்லியன்ஸை ஏன் காப்பாற்ற முடியவில்லை என்றும், இயற்கை அழிவுக்கான மீட்புப்பணிகளே இவ்வளவு தாமதப்படுமானால் ஒரு நாசகாரத் தாக்குதலை எதிர்கொள்ளும் வலு இந்தக் கட்டமைப்புக்கு எவ்வாறு இருக்கும் என்றும் விமர்சகர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

நிறப் பாகுபாட்டை மூடியிருந்த திரையை கத்ரீனா தூக்கி வீசி, உண்மையை உலகுக்கு வெளிப்படுத்தியிருக்கிறது என்று மிகப் பெரிய குண்டைத்தூக்கி போட்டிருக்கிறார் கறுப்பின மக்களின் உரிமைகளுக்காக பாடுபடும் வண.பிதா.ஜெஸி ஜக்ஸன்.

இவரது அணியில் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன், நியூயோர்க் செனட்டரும் எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுபவருமான ஹிலரி கிளின்டன், பல உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகைகள், ஊடகங்கள், எல்லாவற்றுக்கும் மேலாக - நீயூஓர்லியன்ஸ் மக்களின் துயரைத் தனது தொலைக்காட்சி நிகழ்ச்சியூடாக சாதாரண மக்களிடம் கொண்டுசென்ற பிரபல சின்னத்திரைத்தேவதை ஓப்ராவின் பிறே என பலரும் அள்ளிவீசும் விமர்சனங்களுக்கும் களநிலைமைகளுக்கும் முடிச்சுப் போட்டால், நிறவேறுபாடுகள் சாகவில்லை என்றுதான் சாதாரணமக்கள் நினைக்கத் தோன்றுகிறது. அமெரிக்காவின் வரலாற்றில் 1800ஆம் ஆண்டுகளிலே நிகழ்ந்த உள்நாட்டு யுத்தத்தின் போது, பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்தார்கள். அதற்கு பிறகு ஏறத்தாழ அரை மில்லியன் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்தது கத்ரீனாவால் நிகழ்ந்துள்ளது. நியூஓர்லியன்ஸ் நகரில் வெளியேறாமல் இருந்த மக்களின் இறுதிப்போக்கிடமாக இருந்தது சுப்பர்டோம் என்ற விளையாட்டு அரங்கு. அங்கு தங்கியிருந்த அகதிகளின் நிலையை அடிமைக் கப்பல்களிலே பயணம் செய்த ஆபிரிக்கர்களின் நிலையோடு ஒப்பிடுகிறார் வண.பிதா. ஜெஸி ஜாக்ஸன் இந்தத் துயருக்கு இனப்பாகுபாடு ஒரு காரணம் என்கிற கறை இலகுவில் துடைக்கப்பட முடியாதது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

சூழலியலாளர்களுக்கும், பூமிப்பந்தின் சூடேற்றக் கோட்பாட்டின் ஆர்வலர்களுக்கும் கத்ரீனா நிறையவே சுடுவலுவை வழங்கியிருக்கிறது. பூமிப்பந்தின் சூடேற்றம் காரணமாக, வழமைக்கு மாறான சூடான நீரோட்டங்களால் அத்திலாந்திக் சமுத்திரத்தில் புயல்கள் உருவாகும் சாத்தியப்பாடு அதிகரித்திருப்பதாக வாதிடும் இவர்கள், பூமிப்பந்தின் சூடேற்றம் மற்றும் பசுமை வீட்டு வாயுக்கள் வெளியேற்றம் தொடர்பாக ஜப்பானின் கொபே நகரில் உலக நாடுகள் கூடி கையெழுத்திட்ட ஒப்பந்தத்தில் அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய இரண்டு முதன்மை நாடுகள் கையெழுத்திடாததை கத்ரீனாவின் சாக்கை வைத்து ஒரு பிடி பிடித்திருக்கிறார்கள்.

அண்மைக்காலமாக அதிகரித்துவரும் வழக்கத்துக்குமாறான இயற்கைப் பேரழிவுகள்- குறிப்பாக இந்தியாவின் பம்பாயில் பெய்த பெருமழை, ஐரோப்பாவில் நிகழ்ந்த வெள்ளப் பெருக்கு என்பவற்றின் பின்னணியில் பூமிப்பந்தின் சூடேற்றம் என்ற கோட்பாடு பலத்த கவனத்தைப் பெற்றிருக்கிறது. இது ஒருபுற மிருக்க, சுற்றுச்சூழலை நுகர்வதில் மனிதன் கொண்டிருக்கும் எதேச்சையான போக்குக்கும் கத்ரீனாவின் அடி பலமாகவே விழுந் திருக்கிறது. உலகின் ஆற்றுப்படுகைகளிலும், சதுப்புநிலங்களிலும் கட்டியெழுப்பப்படு கின்ற நகரங்களுக்கெல்லாம் நியூஓர்லியன்ஸின் துயரம் ஒரு கசப்பான படிப்பினை. வெள்ளப் பெருக்குகளின் போது, இயற்கையான வடிநிலங்களாகத் தொழிற்படுகிற நியூஓர்லியன்ஸ் உள்ளிட்ட லூசி யானா மாநில சதுப்பு நிலங்கள் ஏக்கர் கணக் கில் விழுங்கப்படு கின்றன. இவற்றைப் பேணிப் பாதுகாக்க சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வைத்த கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டன. கடலோர அபிவிருத்தி நடவடிக்கைகள் தொலைநோக் கற்று வெறுமனே சுயலாபம் தேடும் வகையில் அமைந்ததால், சதுப்புநிலங்கள் விரைந்து மறைகின்றன. றோய்ட்டர்ஸ் செய்திநிறுவனத்திற்கு 'ஜேசன் வெப்' என்கிற பத்திரிகையாளர் எழுதிய செய்திக்குறிப்பில் - நியூஓர்லியன்ஸின் அழிவு சிறுகச்சிறுகவாய் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடந்துவந்த ஒன்று என்கிறார். அவர் மேலும் கூறுகையில் - இயற்கையான கரையோரப்பாதுகாப்பைச் சீரழித்து இந்த அளவிலான ஒரு பேரழிவுக்கான சாத்தியப்பாட்டை உருவாக்க எமக்கு 30 ஆண்டுகள் பிடித்தது. எங்களது வழிமுறைகளின் தவறுகளை எமக்குப் படிப்பிக்கவோ இயற்கைக்குச் சில மணிநேரமே போதுமானதாக இருந்தது என்கிறார்.

அமெரிக்காவில் தற்போது தளைத்து வருகின்ற வலதுசார் சிந்தனைப்போக்குக் குறித்து - அமெரிக்க மக்களுக்கு கத்ரீனா எச்சரிக்கை மணி அடித்திருக்கிறது என்கிறார் ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகையின் லின்டா மக்குவெக். பொதுநலத்தை மறுதலிதது, ஒவ்வொருவரும் தம்மைத்தாமே முதன்மைப்படுத்துகின்ற, கடிவாளமற்ற சுதந்திர சந்தை அமைப்பின் அபாயங்களை அமெரிக்க மக்கள் சந்தித்து வருகின்றார்கள். பலவருடங்களாக வலதுசாரிகள் புத்திஜீவிகளுக்கு பணத்தை வாரிஇறைப்பதன் மூலம், ஒவ்வொரு மனிதனும் தனக்காகவே என்ற கருத்துருவை மனிதகுலத்தைச் செல்வந்த நிலைக்கு உயர்த்தும் அற்புதமான சக்தி எனக்காட்ட முனைந்து வந்திருக்கிறார்கள். ஆனால், ஒவ்வொரு மனிதனும் தனக்காகவே என்பது நிஜத்தில் உருவாக்கி விட்டிருக்கிற சமூகத்தின் பாரதூரமான ஏற்றத்தாழ்வுகளின் விளைவுகளை கத்ரீனா காட்டியிருக்கிறது. ஒரு பேரழிவு விளைவிக்கும் சூறாவளி விரைந்து வரவும், பணம்படைத்தவர்கள் எல்லாம் வெளியேற - வறியவர்களும், நோயாளர்களும், முதியவர்களும் எனப் பல்லாயிரக்கணக்கான மக்கள சர்வசாதாரணமாக கைவிடப்படவும், அவர்களைச் சூழ நீர் மட்டம் உயரவும், கூரை உச்சிகளில் நின்று உதவிவாராதா என ஏங்கவும் வேண்டிய சூழல் உருவானது.

தொழிநுட்பத்தில் சார்ந்து வாழுகின்ற நாம் முற்றுமுழுதாகப் பாதுகாப்புடன் இருக்கிறோம் என்று நினைக்கிறோம். ஆனால், உண்மை அதுவல்ல என்கிறார் கொலராடோ பல்கலைக்கழக பேராசிரியர் டெனிஸ் மெலற்றி. நியூஓர்லியன்ஸின் அணைக்கட்டுகள் நகர வாசிகளுக்கு ஒரு பிழையான பாதுகாப்பு உணர்வைக் கொடுத்திருக்கிறது என்கிறார் மெலற்றி. தொழில்நுட்பத்தின் மேல் கொண்டிருக்கிற அதீத நம்பிக்கையால் ஏற்பட்ட மெத்தனப் போக்கு கத்ரீனாவின் உயிரிழப்புககு ஒரு காரணமாய் அமைந்தது எனலாம். சூறாவளிகளைத் துல்லியமாக எதிர்வு கூறும் வசதிகள் இருந்தும், உயிரிழப்புகள் தவிர்க்கப்படாது போனமை கவலைக்குரியது. இயற்கை அழிவுகளின் போதான மீட்பு மற்றும் முகாமைத்துவ பணிகளில் வறிய நாடுகள் மிகத்துரிதமாகவும், திறமையாகவும் செயற்படுவதாக சர்வதேச ஊடகங்கள் இப்போது சொல்ல ஆரம்பித்திருக்கின்றன. 2004இல், கடந்த 50 வருடங்களில் நிகழ்ந்த சூறாவளிகளில் மிகக் கொடூரமான சூறாவளி 'ஐவன்' கியூபாவைத் தாக்கிய போது, மக்களை வெளியேற்றுவதில் நிமிடக்கணக்கிலான துல்லியமான திட்டமிடலால் உயிரிழப்புகள் ஏதுமின்றி கியூபா தவிர்த்துக் கொள்ள, வேகம் தணிந்து கடல்கடந்த ஐவன் அமெரிக்க கரையோரங்களைத் தாக்கியதில் 25 பேர் பலியானமை இதற்குப் பொருத்தமான எடுத்துக்காட்டு.

பைபிளில் வரும் ஊழிக்கால வெள்ளத்து வர்ணனைகளை ஒத்த கத்ரீனாவின் சன்னதம் வெளிச்சத்துக்கு கொண்டு வந்திருக்கின்ற பல விடயங்கள் குறித்து, இன்னும் சில நாட்களுக்கு வாய் ஓயாது பேசப்படலாம். எல்லாம் தணிந்த பிறகு, மீண்டும் பழைய பழகிய பாதையில் உலகம் நடைபோடலாம் அடுத்த கத்ரீனா வரும் வரை.

# ஒபேலியா சூறாவளியின் வேகம் வலுவடைந்து வருவதாக தகவல்!



ராலிக்

கத்ரீனா சூறாவளியைத் தொடர்ந்து ஒபேலியா என்று அழைக்கப்படும் படு பயங்கர சூறாவளி அமெரிக்க மக்களை மிரட்டுகிறது. தற்போது கடலில் மையம் கொண்டுள்ள ஒபேலியா சூறாவளியால் வடக்கு கரோலினா மாகாணத்தில் கடும் மழை பெய்து வருகிறது.

பலத்த வேகத்துடன் காற்று வீசுவதால் பல இடங்களில் மரங்கள் சாய்ந்துள்ளன. போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. ஒரு லட்சத்து 23 ஆயிரம் பேர் மின்சார வசதியின்றி தவித்து வருகின்றனர். இந்த சூறாவளியால் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது.

அமெரிக்காவில் மூன்று வாரங்களுக்கு முன் கத்ரீனா சூறாவளி வீசியதில் மிசிசிபி, லூசியானா, அலபாமா ஆகிய மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. மிக மோசமாக பாதிக்கப்பட்ட நியூ ஓர்லியன்ஸ் நகரில் மட்டும் 10 ஆயிரம் பேர் இறந்து விட்டனர். மூன்று மாகாணங்களிலும் 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து, ஒபேலியா என்ற சூறாவளி தற்போது வடக்கு கரோலினா மாகாண மக்களை அச்சுறுத்தி வருகிறது. கடற்கரையோரம் அமைந்துள்ள இந்த மாகாணத்தில் ஏழு லட்சம் பேர் வசித்து வருகின்றனர். கடந்த சில நாட்களாகவே இப்பகுதியில் ஒபேலியா சூறாவளி மையம் கொண்டிருப்பதாக வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை விடுத்து வந்தது.

தற்போது இந்த சூறாவளி கரையை நோக்கி நகருவதால் வடக்கு கரோலினாவின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு கடும் மழை பெய்துள்ளது. கடுமையான வேகத்தில் காற்று வீசுவதால் மக்கள் பீதியடைந்துள்ளனர். பல பகுதிகளில் மரங்கள் சாய்ந்து போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. மிக உயரமான பாலங்களில் போக்குவரத்து நடைபெறவில்லை.

சூறாவளி எச்சரிக்கையைத் தொடர்ந்து வடக்கு கரோலினா பகுதியில் உள்ள பாடசாலைகள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள், வர்த்தக நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. தாழ் வான பகுதிகளில் இருந்த ஆயிரக் காணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தற்போது இப்பகுதியில் காற்றுடன் கூடிய கன மழை பெய்து வருகிறது. கடலின் சீற்றம் அதிகமாகி பல அடி உயரத்துக்கு அலைகள் எழும்பி மிரட்டி வருகின்றன. கடற்கரையோரமாக அமைந்திருந்த வீதிகள் தண்ணீரால் சூழப்பட்டுள்ளன.

அமெரிக்க வானிலை ஆராய்ச்சி மையம், ஒபேலியா சூறாவளி மேலும் வலுவடைந்து வருவதாக தெரிவித்தது. மணிக்கு 136 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுகிறது. இந்தத் சூறாவளி எந்த நேரத்திலும் கரையைக் கடக்கலாம்.

இதனால் இரண்டு நாட்களில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்படும் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. கடுமையான காற்று வீசியதில் மோரேஹெட் நகரில் உள்ள வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. மீன்பிடி பகுதி கடுமையான சேதம் அடைந்துள்ளது. கடுமையான காற்று வீசியபோது பிரதான வீதியில் காரில் பயணம் செய்த பெண் ஒருவர் இறந்தார். அவர் பயணம் செய்த கார் நிலை தடுமாறி மரத்தின் மீது மோதியதில் விபத்து ஏற்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர்.

ஒபேலியா சூறாவளி கரையைக் கடக்கும் போது வடக்கு கரோலினா பகுதியில் 15 அங்குலம் அளவுக்கு மழை பெய்யலாம். 11 அடி உயரத்துக்கு கடல் அலைகள் எழும்பலாம் என்று வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரித்துள்ளது.




## நாடாளுமன்ற வேட்பாளர் ஆப்கானில் சுட்டுக்கொலை!

காபூல்

ஆப்கானின் ஹெல்மன்ட் மாகாணத்தில் தலிபான் கிளர்ச்சிவாத சந்தேக நபர்கள் நடத்திய தாக்குதலில் தேர்தல் வேட்பாளர் ஒருவர் கொல்லப்பட்டார். இந்தத்தாக்குதலில் கொல்லப்பட்டவர் நாளை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளரான அப்துல் ஷதி எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு குறித்த வேட்பாளரின் வீட்டிற்கு சென்ற கிளர்ச்சிவாதிகள் அவரை வீட்டிற்கு வெளியே இழுத்து சுட்டுக்கொன்ற பின்னர் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக படையினர் தேடுதல்களை மேற்கொண்டபோதிலும், எவரும் கைது செய்யப் படவில்லையென மாகாண ஆளுநரின் பேச்சாளர் மொகமட் வலி தெரிவித்தார்.

கடந்த யூலை மாதத்திலிருந்து இது வரை ஆறு வேட்பாளர்கள் கிளர்ச்சிவாதிகளால் கொல்லப் பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### மலைப் பாதையில் கார்விபத்து

## 8 நாட்களின் பின் பெண் உயிருடன் மீட்கப்பட்டார்!

சிட்னி

அவுஸ்ரேலியாவில் உள்ள வடக்கு குயின்ஸ்லாண்ட் பகுதி மலைப்பாதையில் சென்ற கார் விபத்துக்குள்ளாகி 210 அடி ஆழமானபள்ளத்தில் கவிழ்ந்தது. 8 நாட்களுக்கு பிறகு கார் நொருங்கிக் கிடக்கும் இடத்தை மீட்புக் குழுவினர் கண்டுபடித்து பாரம் தூக்கிமூலம் தூக்கினார்கள்.

காருக்குள் 60 வயது கார்த்தியன் எலக்காட் என்ற பெண் மயங்கிய நிலையில் கிடந்தார். அவரது உடலில் சிராய்ப்பு காயங்களும் கால் எலும்பில் முறிவும் ஏற்பட்டிருந்தது. உடனடியாக அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். 8 நாட்களுக்குப் பிறகு உயிரோடு திரும்பிய அவரைப் பார்த்ததும் உறவினர்கள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர். கொசு எறும்புகள் கடித்ததால் காயமும் ஏற்பட்டுள்ளது. அவர் நல்ல உடல் நலத்துடன் இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.


## இரத்ததானம் பாதுகாப்பானது

இரத்ததானத்தின் முன் இரத்தம் வழங்குவதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் நோய்கள் இருக்கின்றதா என்பது கேட்டு அறியப்படும்.
பின்னர் நாடித்துடிப்பு, குருதிஅழுக்கம் போன்ற முக்கியமான சோதனைகள் செய்யப்படும்.
குருதி கொடையாளர்களின் உடல் நிறையும் குருதிசெறிவும் அளக்கப்படும்.
உணவு நீராகாரம் உட்கொண்ட விபரம் கேட்டு அறியப்படும்.
உடலில் உள்ள குருதியில் 10 வீத குருதியே பெற்றுக் கொள்ளப்படும்.
குருதி தைங்கலின் பின்னர் சிறிது நேர ஓய்வும் நீர்ஆகாரமும் வழங்கப்படும்.
குருதி வழங்கலுக்குப்பின்னர் கடைப்பிடிக்க வேண்டியவை சம்பந்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்



# நல்லூர் லயன்ஸ் கழகம்
## தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்
## தொழில்சார் பயிற்சிப்பட்டறை-2005

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இயங்கும் சேவைக்கழகங்களில் உள்ள மாணவர்கள் மத்தியில் தகவல் தொழில்நுட்பம், மற்றும் தலைமைத்துவம் என்பவற்றை விருத்தி செய்யும் நோக்குடன் நல்லூர் லயன்ஸ் கழகம் யா/ மத்திய கல்லூரி, யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை லியோகழகங்களின் உதவியுடன் பயிற்சிப்பட்டறை ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது. பயிற்சிப்பட்டறையில் பங்குகொள்ளும் மாணவர்களின் பதிவுகள் இடம்பெற்று வருகின்றன. உங்கள் பதிவுகளை பாடசாலை ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ளவும். இதுவரை பதிவுகளை மேற்கொள்ளத் தவறிய மாணவர்கள் நேரடியாக 19ம் திகதி காலை 8.30 மணிக்கு யா/ மத்திய கல்லூரிக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**இடம் : யா/மத்திய கல்லூரி மண்டபம்**
**காலம் : 19.09.2005 தொடக்கம் 23.09.2005 வரை**
**09.00 மணி முதல் 04.00 மணி வரை**

தகவல் தொழில்நுட்பத்திலும் முகாமைத்துவத்திலும் அனுபவமிக்க தொழில்சார் வல்லுநர்களின் உதவியுடன் இப்பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளதால் மாணவர்கள் இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

- வயதெல்லை : 14 – 19
- பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு : தலைவர், நல்லூர் லயன்ஸ் கழகம்
I.IS CITY CAMPUS
# 181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 8060

ஊடக அனுசரணை:-
நமது ஈழநாடு


## தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்கு தெரிவானோர் விபரம் - 2005

தமிழீழ மீட்புநிதி மீளளிப்புக்குத் தெரிவு செய்யப்பட்ட வர்களின் விபரங்களை தமிழீழ நிதித்துறை வெளியிட் டுள்ளது.
பிரதேசரீதியாகத் தெரிவானோரின் விபரம் வருமாறு:

### வவுனியா மாவட்டம்
### மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

(நேற்றைய தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| 22 | வ/வ/276 | திருமதி.பாக்கியம் நாகரத்தினம் |
| 23 | வ/வ/289 | திரு.பொன்னையா பாலசுப்பிரமணியம் |
| 24 | வ/வ/312 | திரு.நல்லதம்பி வீரவாகு |
| 25 | வ/வ/317 | திரு.கார்த்திகேசு கனகசிங்கம் |
| 26 | வ/வ/359 | திரு.கணபதிப்பிள்ளை சின்னத்துரை |
| 27 | வ/வ/387 | திரு. முத்துத்தம்பி தெட்சணாமூர்த்தி |
| 28 | வ/வ/394 | திரு. நல்லையா தர்மபுத்திரன் |
| 29 | வ/வ/400 | திரு. ஆறுமுகம் பத்மநாதன் |
| 30 | வ/வ/401 | திரு. செல்லப்பா இராசசேகரம் |
| 31 | வ/வ/421 | திரு. சுப்பிரமணியம் சோமசேகரம் |
| 32 | வ/வ/433 | திரு. நாயகம் நாகப்பன் |
| 33 | வ/வ/441 | திரு. சிறிகண்டு முருகையா |
| 34 | வ/வ/455 | திரு. சவரிமுத்து இராசலிங்கம் |
| 35 | வ/வ/507 | திரு. கறுப்பையா சிதம்பரம் |
| 36 | வ/வ/512 | திரு. காசிப்பிள்ளை பாலசிங்கம் |
| 37 | வ/வ/572 | திருமதி. கற்பகம் துரைராசா |
| 38 | வ/வ/577 | திரு. சுவானி சந்தியோகு |
| 39 | வ/வ/591 | திரு. சின்னத்தம்பி மகாலிங்கம் |
| 40 | வ/வ/607 | திருமதி. வள்ளிப்பிள்ளை கணபதிப்பிள்ளை |
| 41 | வ/வ/621 | திரு. சிற்றம்பலம் பத்மநாதன் |
| 42 | வ/வ/651 | திரு. முத்துக்குமாரு சிவசுப்பிரமணியம் |
| 43 | வ/வ/664 | திரு. கணபதிப்பிள்ளை தியாகராசா |
| 44 | வ/வ/677 | திரு. குருநாதன் நல்லதம்பி |
| 45 | வ/வ/681 | திரு. வேலுப்பிள்ளை இராசநாயகம் |
| 46 | வ/வ/710 | திரு. சிவகுரு சரவணமுத்து |

### வவுனியா மாவட்டம்
### குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்

| | | |
|---|---|---|
| 1 | வ/வ/17 | திரு. கோபால் ஸ்ரீஸ்கந்தராசா |
| 2 | வ/வ/34 | திரு. இராசையா கனகரட்ணம் |
| 3 | வ/வ/43 | திரு. வேலுப்பிள்ளை செந்தில்நாதன் |
| 4 | வ/வ/129 | திரு. கதிர்காமு வல்லிபுரநாதன் |
| 5 | வ/வ/146 | திருமதி.நாகமுத்துபெரியதம்பி |
| 6 | வ/வ/150 | திரு. ஆறுமுகம் பரராசசிங்கம் |
| 7 | வ/வ/158 | திரு. கந்தையா இராசதுரை |
| 8 | வ/வ/163 | திரு. அதிரியாம்பிள்ளை அலோசியஸ் |
| 9 | வ/வ/177 | திருமதி. பொன்னுப்பிள்ளை செல்லத்தம்பி |
| 10 | வ/வ/190 | திரு. தருமலிங்கம் நகுலேந்திரராசா |
| 11 | வ/வ/221 | திரு. நாகேஸ் இரத்தினராசா |
| 12 | வ/வ/227 | திரு. சின்னையா செல்வராசா |
| 13 | வ/வ/238 | திரு. முருகர் தில்லையம்பலம் |
| 14 | வ/வ/344 | திரு. அருளம்பலம் கனகசிங்கம் |
| 15 | வ/வ/349 | திருமதி. ராதாலட்சுமி ஜெகநாதன் |
| 16 | வ/வ/353 | திரு. சந்தனம் சிவரத்தினம் |
| 17 | வ/வ/381 | திரு. நல்லதம்பி தியாகராசா |
| 18 | வ/வ/437 | திரு. மாணிக்கம் வரதராசா |
| 19 | வ/வ/446 | திரு. இரத்தினம் செல்வநாயகம் |
| 20 | வ/வ/449 | திருமதி. குணேஸ்வரி சிவபாதசுந்தரம |
| 21 | வ/வ/457 | திரு. இராமலிங்கம் இந்திரராசா |
| 22 | வ/வ/467 | திரு. கார்த்திகேசு சிவலிங்கம் |
| 23 | வ/வ/470 | திரு. செல்லப்பா தம்பிராசா |
| 24 | வ/வ/474 | திரு. அப்பாப்பிள்ளை இராசரத்தினம் |
| 25 | வ/வ/498 | திருமதி. அபியாம்பிகைஅம்மாள் சுப்பிரமணியம் |
| 26 | வ/வ/515 | திரு. காசிப்பிள்ளை அமிர்தலிங்கம் |
| 27 | வ/வ/530 | திரு. கிருஷ்ணன் தேவசுதன் |
| 28 | வ/வ/600 | திரு. சபாரத்தினம் பஞ்சவர்ணம் |
| 29 | வ/வ/617 | திரு. அருணாசலம் காத்தலிங்கம் |
| 30 | வ/வ/619 | திரு. செல்லையா வில்வராசா |
| 31 | வ/வ/624 | திரு. கதிரவேலு சின்னையா |
| 32 | வ/வ/644 | திரு.மயில்வாகனம் விமலானந்தன் |
| 33 | வ/வ/693 | திரு. நாகலிங்கம் தர்மராஜா |

(முற்றும்)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஹெல்பிங் அம்பாந்தோட்டை தவறான தகவல்களை வெளியிட்டதற்கு நட்டஈடு கோருகிறார் பிரதமர் மகிந்த!

கொழும்பு—

ஹெல்பிங் அம்பாந்தோட்டை என்ற வங்கிக் கணக்குத் தொடர்பாக தவறான தகவல்களுடன் கட்டுரை ஒன்றைப் பிரசுரித்து தமது நற்பெயருக்கு களங்கம் விளைவித்ததற்காக ஒரு பில்லியன் ரூபா நஷ்ட ஈடுகோரி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, சண்டே லீடர் பிரசுர நிறுவனம் மற்றும் அதன் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க ஆகியோருக்கு கடிதங்கள் அனுப்பியுள்ளார்.

இருவார காலத்தில் இந்த இழப்பீட்டுத் தொகையை சம்பந்தப்பட்ட தரப்பினர் செலுத்தாவிட்டால், சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று அந்தக் கடிதத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஹெல்பிங் அம்பாந்தோட்டை உதவி வழங்கும் கணக்குத் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்தப்படவேண்டுமெனக் கோரி, சண்டே லீடர் வெளியிட்ட கட்டுரை முற்றிலும் ஆதாரமற்ற தகவல்களை வெளிப்படுத்தி தனக்கு களங்கம் விளைவிக்க முற்பட்டுள்ளதாக பிரதமர் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நெடுந்தீவு கடற்பகுதியில் 4 இந்திய மீனவர் கைது!

நெடுந்தீவு—

இந்திய மீனவர்கள் நான்கு பேர் நெடுந்தீவு பொலிஸாரால் வெல்லைக் கடற்பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு கடந்த ஐந்து நாட்களாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு தெற்கு கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை கடும் காற்றுக் காரணமாக பாறையுடன் மோதி படகு சேதமடைந்ததால் திரும்பிச்செல்ல முடியாத நிலையில வெல்லைக் கடற்கரைப் பகுதியில் தரையிறங்கிய வேளையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

கடந்த ஐந்து நாட்களாக இவர்கள் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன் இவர்களின் படகு வெல்லைக் கடற்பகுதியில் சிக்கிக் கிடப்பது குறிப்பிடத்தக்கது. (113)

# மகிந்தவின் தேர்தல் பிரசாரம் செவ்வாயன்று ஆரம்பம்!

கொழும்பு—

எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பு மாநகரசபைத் திடலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ பிரசாரத்தை ஆரம்பிக்கவுள்ளார்.

இந்தப் பிரசாரக் கூட்டம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறிலங்காவில் வெற்றிகொள்வோம்! என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விசேட அறிக்கையை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வெளியிடவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்களை பங்குபற்றச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்தார். (தே)

## மலையாள...

நுழைந்து தாக்குதல் நடத்தினர்.

விளம்பரப் பலகையையும், ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்து நொறுக்கியதுடன் வீடும் சேதமாக்கப்பட்டது.

அத்துடன், வீட்டில் நின்ற புத்தம் புதிய ஓட்டோ ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் தீவைத்து எரிக்கப்பட்டன. இந்தச் சம்பவத்தில் மலையாள மாந்திரீகரும் கடுமையாகத் தாக்கப்பட்டு படுகாயமடைந்ததாகவும்- இவர் தற்போது வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரியவருகிறது.

# 3 தமிழ் இளைஞர்கள் கொழும்பு நகரில் கைது!

9 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவுடன் ஓட்டோ ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ்இளைஞர்கள் உட்பட மூவர் புறக்கோட்டையிலுள்ள படையினரின் சோதனைச் சாவடியில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

சத்தியவடிவேல் - கேதீஸ்வரன் (மானிப்பாய்), சந்திரன் சுசில்குமரன் மற்றும் ஓட்டோ சாரதியான பிறேமதாசன் லோறன்ஸ் ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக புறக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (தே)

## தொலைக்காட்சி பார்ப்பதிலும் இலங்கையர் கின்னஸ் சாதனை

இலங்கைத் தமிழரான சுரேஷ் ஜோக்கிம் - 69 மணித்தியாலம் 48 நிமிடங்கள் தொடர்ச்சியாக தொலைக்காட்சி பார்த்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இதன்மூலம் 50 மணித்தியாலம் 7 நிமிடங்கள் என்ற முன்னைய சாதனையை இவர் நேற்று முறியடித்தார்.

ஒவ்வொரு 8 மணித்தியாலத்துக்கும் 15 நிமிடமே திரையைவிட்டு பார்வையை வேறு இடத்திற்கு நகர்த்திய இவர் வேறுவேறு 16 கின்னஸ் சாதனைகளைப் படைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# வலுவான கண்காணிப்புக் குழு கிழக்கில் உருவாக்க வேண்டும்!

## மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை

கிழக்கிலங்கையில் வன்முறைகளைக் கட்டுப்படுத்த வலுவான கண்காணிப்புக்குழு உருவாக்கப்படவேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

கிழக்குப்பிரதேச மனித உரிமைகள் குறித்த தனது அறிக்கையிலேயே மனித உரிமைகள் ஆணைக்குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்தப் பிரதேசத்தில் அதிகரித்து வரும் மனித உரிமைகள் மீறல்களை உரிய விசாரணை நடத்த வலுவான, சுயாதீனமான, ஆயுதப் பாதுகாப்புடைய ஒரு கண்காணிப்புக் குழு உருவாக்கப்படவேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் முதல் கிழக்குப் பிரதேசத்தில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## அமரபுர...

பேசிய அவர்-

நாட்டின் அரசியல் நிலவரம் தொடர்பான கருத்துக்கள் எதனையும் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

மட்டக்களப்பு மற்றும் காத்தான்குடி பகுதியிலுள்ள சில சுனாமி நலன்புரி நிலையங்களுக்கும் நேரில் சென்ற அவர் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டார்.

இரு நாட்கள் மட்டக்களப்பில் தங்கியிருந்து பல்வேறு பகுதிகளுக்கும் நேரில் பயணம்செய்து மக்களை சந்திக்கவுள்ள மகாநாயக்கர், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று அரசியல் துறைப்பொறுப்பாளர்களையும் சந்திப்பார் எனத் தெரியவருகிறது.

யாழ்.நாக விகாரை விகாராதிபதி ப்ரக்மான வத்தே சீவலி தேரோவும், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவும் இவருடன் மட்டக்களப்பு சென்றுள்ளனர்.

சுமார் 40 வருடகால இடைவெளியின் பின்பு பௌத்த மகாநாயக்கர் ஒருவர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மேற்கொண்ட முதலாவது பயணம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## பிரதேச சபைத் தலைவரின் வீட்டின் மீது தாக்குதல்!

பொலனறுவ மாவட்டத்திலுள்ள திம்புலாகல பிரதேசசபைத் தலைவர் சனத்குமார குலதுங்கவின் இல்லம் மீது நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

செவனப்பிட்டியவிலுள்ள அவரது இல்லம் மீது நேற்று முன்தினம்இரவு 10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களால் இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன்போது வீட்டிற்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த வாகனமும் வீட்டின் முன்பகுதியும் சேதமடைந்தன.

இதனிடையே திருகோணமலை மாவட்டம் அனுராதபுர சந்தியிலுள்ள பொலிஸ் மற்றும் விமானப்படை கூட்டு வீதித்தடை மீதும் மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி காவலரண் மீதும் நேற்று முன்தினம் இரவு கைக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இத்தாக்குதல்களில் சேதங்கள் எதுவும் இல்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

## அவசரகால...

தொடர்ந்து அமுல்படுத்தப்படாது என்றே கருதப்பட்டது.

ஆனால், மீண்டும் இந்த அவசரகாலச்சட்டத்தை அமுல்படுத்தியிருப்பதால் தமிழ் இளைஞர்கள் கைது, தேடுதல் போன்ற நடவடிக்கைகள் தொடர வாய்ப்புக்கள் இருப்பதாகக் கருதப்படுகிறது.

இதேவேளை - கடந்த முறை நாடாளுமன்றத்தில் அவசரகாலச்சட்டத்தை அங்கீகரிப்பதற்கான சட்டமூலத்துக்கு ஆதரவளித்த ஐ.தே.க இரண்டாவதுமுறை நீடிப்பதற்கு அனுமதிக்கமுடியாது எனத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்மக்கள் சுயநிர்ணய...

இந்த உதவிகளைப் பெற்றேன். 20 ஆண்டுகால யுத்தத்தால் இங்கே அகதிகளாக வந்தவர்கள் அவுஸ்ரேலியராக இருப்பதில் பெருமிதம் கொள்கிறார்கள். தமது சமூகத்துக்கான பங்களிப்பை அவர்கள் செய்து வருகிறார்கள்.

ஆனால், அவர்களது சொந்தத் தாயகம் குறித்தும், தமிழ் மக்கள் குறித்தும் அக்கறையோடிருக்கிறார்கள்.

தமிழர்கள் தனித்துவமாக சொந்த மொழி, கலாசாரம், பண்பாடு, சமய விழுமியங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். இலங்கை சுதந்திரமடைந்த 1948 ஆம் ஆண்டிலிருந்தே அதிகாரங்கள் சிங்களவர்களுக்கு - மேலாதிக்கம் பெற்ற புத்த மதத்தினருக்கு உரியதாக்கப்பட்டது. இப்போது அவர்கள் 80 சதவீதத்தினராக அந்த நாட்டில் இருக்கிறார்கள். தமிழர்களில் இந்துக்கள் 20 வீதத்தினர் வாழ்கின்றனர். கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் இனத்தவர்களும் அங்கே வாழ்ந்துவருகின்றனர்.

தமிழ்ச் சிறுபான்மையினரது உரிமைகள் காலங்காலமாக ஒடுக்கப்பட்டு வந்தே உள்ளன. அவர்கள் ஒடுக்குமுறைகளுக்கும், அழித்தொழிப்புகளுக்கும் உள்ளாகினர். தமிழர்கள் பரீட்சையில் உயர் மதிப்பெண் பெற்றிருந்தாலும் சிங்களவர்களுக்கு மட்டுமே பல்கலைக்கழகங்களில் அனுமதி வழங்கப்பட்டது.

வேலைவாய்ப்புக்களிலும் திட்டமிட்டுத் தமிழர்கள் தடுக்கப்பட்டு சிங்களவர்களுக்கே பணிகள் வழங்கப்பட்டன. தமிழர்களது வர்த்தக வாய்ப்புக்களை சிங்களவர்கள் நிராகரித்தனர். தமிழர்கள் மீதான அழித்தொழிப்பு நடவடிக்கைகள் திட்டமிட்டே நடத்தப்பட்டதாக கத்தோலிக்க மதகுருமார்கள் என்னிடம் தெரிவித்தனர்.

என்னைச் சந்தித்த கத்தோலிக்க மதகுரு ஒருவர் ஆறுபக்க அளவிலான அறிக்கை ஒன்றை அளித்தார். அதில் இலங்கையின் வடபகுதியில் தாக்குதல்களுக் குள்ளான, விமானக் குண்டுவீச்சுக்குள்ளான தேவாலயங்கள் பற்றிய விபரங்கள் இருந்தன.

93 தேவாலயங்கள் முழுவதும் சேதமடைந்துள்ளன. 186 தேவாலயங்கள் பகுதியாகவும், 20 தேவாலயங்கள் சிறிய அளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிகழ்வுகள் அந்த மக்களை நம்பிக்கையிழக்க வைத்துள்ளன.

இலங்கையின் பெரும்பான்மை ஆதிக்கம் உள்ள அரசாங்கமும் ஊடகங்கள் வாயிலாக சிறுபான்மையினருக்கு எதிரான பிரசாரங்களையே உருவாக்கி வருகிறது. இன வெறியையும், அச்சத்தையும் அரசாங்கமே வளர்த்தெடுத்துள்ளது.

அந்த நாட்டின் உண்மையான நிகழ்வுகள் உலகத்தின் பார்வையில் மறைக்கப்பட்டுவிட்டன. நான் தமிழீழத்துக்குச் செல்வதை தடுக்கின்ற முயற்சிகளையும் சிலர் மேற்கொண்டனர். 'ஏசியன் றிபியூன்' இணையத்தளத்தின் அவுஸ்ரேலியப் பிரிவினர் - நான் இலங்கைக்கு ஒரு லட்சம் அமெரிக்க டொலர் எடுத்துச் செல்வதாக செய்தி பரப்பினார்கள்.

அது உண்மையாக இருக்குமானால் அவுஸ்ரேலிய அரச சட்டத்தை மீறியதாகவும்என்வாழ்க்கை ஆ[illegible]த நோக்கியதாகவும் இருந்திருக்கும். இவையெல்லாம் என்னுடைய இலங்கைப் பயணத்தைத் தடுக்கப் போடப்பட்ட முட்டுக்கட்டைகள். இவைகள் என்னைப் பாதிக்கவில்லை.

இந்த மூன்று ஆண்டுகாலத்தில் தமிழர்கள் தங்களுக்கான ஒரு அரசை, நடைமுறை அரசை இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் உருவாக்கி செயற்படுத்திவருகிறார்கள்.

தமிழீழத்தின் நீதித்துறை குறித்தும் நீதிமன்றம், சட்டக்கல்லூரி, காவல் நிலையம், காவல் பயிற்சி மையம், மருத்துவ மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள், சிறுதொழிற்சாலைகள், தமிழீழ வைப்பகம், சிறுவர் இல்லங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டேன்.

சுனாமியாலும், யுத்தத்தாலும் பாதிக்கப்பட்ட 278 சிறுவர்கள் அங்கே பராமரிக்கப்பட்டுவருகின்றனர்.

மீளமைப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சிறப்பாகச் செய்துவருகிறது. தங்களது செயற்திட்டங்களுடன் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களையும் இணைத்துக் கொண்டு அவர்கள் இயங்கிவருகின்றனர். 2002 ஆம் ஆண்டு பெப்ரவரியில் நோர்வே அனுசரணையோடு யுத்தநிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. நோர்வேக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

இலங்கை அரசானது அதிகாரப் பரவலாக்கத்தைச் செயற்படுத்த வேண்டும். தமிழ் மக்களின் சுயாட்சியான உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய கூட்டாட்சி முறையாக அது இருக்கவேண்டும். அப்போது தான் தமிழர்கள் தங்களது கலாசார, அரசியல், பொருளியல் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளமுடியும்.

தங்களது சொந்தத் தாயகம் என்று ஒரு மனிதன் அழைக்கின்ற பிரதேசத்தில் சமத்துவமாகவும், சமூக நீதியோடும், சுதந்திரமாகவும் வாழ உரிமை உண்டு.

அதேபோல்தான் ஐக்கிய இலங்கை என்ற அமைப்புக்குள் தமிழர்கள் சுயநிர்ணய உரிமை பெற்றவர்களாக, சமத்துவமாக வாழுகின்ற கூட்டாட்சி முறையை ஏற்படுத்தவேண்டும். யுத்தம் இருதரப்பிலும் பாரிய சேதங்களை உருவாக்கியிருக்கிறது.

தமிழ்மக்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களுக்கு சர்வதேச சமூகத்தின் உதவி தேவை. இலங்கையின் உண்மை நிலையை அறிய சர்வதேச சமூகமானது சுயாதீனமான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழர் பிரதேசங்களைப் பார்வையிட்டு அங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை உணரவேண்டும். இதுவே எனது வேண்டுகோள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இன்று ஆரம்பம்
DAY CLASS
A/L - 2006
(கலைப்பிரிவு)
காலை - 8.00 மணி
DMI
Jaffna
[C/4597]

குருதிக்கொடையாளர் கௌரவிப்பு விழா
2005 செப்ரெம்பர் 21
குருதி கொடையாளர்களே உங்கள் தியாகத்தை மதிக்கிறோம்.
இடம் : வீரசிங்கம் மண்டபம் நேரம் : காலை 9.00 மணி

aat பதிவுகள்
A/L பரீட்சையை முதல் தடவையாக 2005 ஆம் ஆண்டு எழுதிய மாணவர்களுக்கான aat பதிவுகள்
23.09.2005 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாசி English medium மூலம் கற்கை நெறியை மேற்கொள்ளவிருக்கும் மாணவர்களுக்கான English Class மிக விரைவில் ஆரம்பம்
ஆ.நேரம் : திங்கள், புதன், வெள்ளி 10.00 - 2.00
சனி, ஞாயிறு 8.30 - 2.00
(சி-4612)
Career.Com
# 167, 1st Cross Street. Jaffna.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தமிழ்மக்களின் எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தும் கடமை பல்கலைக்கழக சமூகத்திற்கு உள்ளது

## பேராசிரியர் எஸ்.மோகனதாஸ்

யாழ்ப்பாணம் —

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, அதே தருணம் இக்கட்டான ஒரு கால கட்டத்தில் தமிழ் மக்களாகிய நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். 2001 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக சமூகத்தால் முன்னெடுக்கப்பட்ட பொங்கு தமிழ், பின்னர் ஈழத் தமிழரின் குரலாகப் பரிணமித்தது என, துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெற்ற பொங்குதமிழ் ஆலோசனைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மாணவர் ஒன்றியத் தலைவர் விஜயரூபன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

இன்றைய தென்னிலங்கை அரசியற் சூழலில் கொழும்பு ஆட்சியாளர்களுக்கும், சர்வ தேசத் தலைவர்களுக்கும், தமிழ் மக்களின் குரலை உரத்து வெளிப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. எனவே, இந்தப் பொங்கு தமிழ் 2005 மிக முக்கியமானது. எமது மக்கள் பல்கலைக்கழகத்திடமிருந்து நிறைய எதிர்பார்க்கிறார்கள். அதற்கேற்ப பொங்கு தமிழ் ஏற்பாட்டில் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் உட்பட அனைவரும் முழுமையான அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்.

பல்கலைக்கழகச் சமுதாயம் தமிழ் சமுதாயத்துக்கு ஆற்ற வேண்டிய கடமை, பொறுப்பு இதுவாகும். பரந்துபட்ட தமிழ் சமூகத்தை உள்வாங்கும் வகையிலானதிட்டமிடலுடன்பொங்கு தமிழுக்காய் பல்கலைக்கழக சமூகம் உழைக்க வேண்டும் எனக் கூறினார்.

பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி உரையாற்றுகையில் -

இலங்கையின் சமகால அரசியலில் உரிமை வேண்டும் ஒரு தொகுதியினர். உரிமைகளை வழங்க விரும்பாத வேறொரு தொகுதியினர் எனத் தெளிவாகப் பிரிக்கப்பட்ட இரு பிரிவுகள் உள்ளன. இந்தக் கால கட்டத்தில் சில விடயங்களை இறுக்கமாகக் கூற வேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு உள்ளது. எனவேதான் இன்று மீண்டும் ஒரு பொங்கு தமிழ் அவசியமாகியுள்ளது. யாழ்ப்பாணப் பல்லைக்கழகம், யாழ்ப்பாணச் சமூகத்தின் ஒரு மாதிரியாக உள்ளதால், பல்கலைக்கழகத்தினருக்கு பொங்கு தமிழை நெறிப்படுத்தி உதவ வேண்டிய கடமையுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# க.பொ.த உயர்தரப் பரீட்சை; மேலும் சில பெறுபேறுகள்!

யாழ்ப்பாணம் —

அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மேலும் இரண்டு பாடசாலைகள் பெற்ற பெறுபேறுகள் வருமாறு -

### புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி

**கலைப்பிரிவு**

இ.சிந்துஜா 3ஏ (மாவட்ட நிலை 14) த.பிரியங்கா 3ஏ (மாவட்ட நிலை 24) 2ஏ,பி - நால்வர், 2ஏ,சி - இருவர், ஏ,2பி - இருவர், எ,பி,சி - ஐவர், ஏ,2சி - மூவர், 3பி - ஒருவர்.

### பரியோவான் கல்லூரி

**கணிதம்**

ஜி.கார்த்திகன் 3ஏ, கே.கோபிநாத் 3 ஏ, ரி.மதன்ராஜ் 2ஏ,பி, எஸ்.கௌசிகன் ஏ,2பி, பி.முகுந்தன் 2ஏ,சி, எஸ்.நவதர்சன் ஏ,பி,சி, ரி.லௌசிகன் 3பி, ரி.தீனதயாளன் 3 பி, பி.நிதர்சன் 3பி.

**உயிரியல்**

ரி.சாய்சானந்த் 3ஏ, பி.சதீஷ் 2ஏ,பி, எஸ்.அபலயன் ஏ,பி,சி,

**வர்த்தகம்**

ஏ.மயூரதன் 2ஏ,பி, ஜெ.அலோய் நிரேஷ் 2ஏ, பி, ரி.துஷ்யந்தன் 2ஏ,பி, பி.கஜேந்திரன் 2ஏ,சி, எஸ்.கபிலதீபன் 2ஏ,சி, ஜே.தனுஷன் 2ஏ,சி, வி.கலைச்செல்வன் 2ஏ,சி, ஈ.ரொமிடன் ஜெரமி ஏ,பி,சி, ஜெ.ஆர்தர் கிளைவ் 3பி.

**கலைப்பிரிவு**

ரி.கணதீபன் 3ஏ, எஸ்.சந்துரு 2ஏ,பி, என்.கரன் ஏ,2பி.

# பாடசாலைகளில் நன்கொடைகள் அறவீடு; தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

சுதுமலை —

எமது பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதாயினும் சரி, பாடசாலையை விட்டு விலகுவதாயினும் சரி, பெற்றோர்களிடம் - பாடசாலை அதிபர்கள் சிலர் நன்கொடை கோருவதாகவும், இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கமாறும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் அந்தப் பகுதி கோட்டக் கல்விப் பணிப்பாளரிடம் கேட்டுள்ளார்.

• சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில், மாணவர்களை அனுமதிப்பதாயினும் சரி, மாணவர்களுக்கு பாடசாலை விடுகைப் பத்திரம் வழங்குவதாயினும் சரி பாடசாலை நிர்வாகத்தினர் அங்கு செல்பவர்களிடம் அன்பளிப்புகள் கோருகின்றனர்.

இது தவிர, பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளான ஒப்படைகளுக்கு சூழலிலுள்ள பொருட்களைப் பாவித்துச் செய்யும் வேலைகளுக்குக் குறைவான புள்ளிகளையும், கடையில் விற்பனை செய்யப்படும் பொருட்களைக் கொள்வனவு செய்து தயாரிக்கப்படும் ஒப்படைகளுக்குக் கூடுதலான புள்ளிகளையும் சில பாடசாலைகள் வழங்கி வருகின்றன என, எமக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகப் பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்த அந்தப் பகுதிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர், இது குறித்து சம்பந்தப்பட்ட பாடசாலையின் அதிபர்களுடன் கலந்துரையாடல் நடத்தி, மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதாகவும் கூறியுள்ளார். (44)

## மூத்தகவிஞர் கலாநிதி.இ.முருகையனின் அகவை 70 ஆவது நிறைவு குறித்த கலை இலக்கிய ஒன்று கூடல்

யாழ்ப்பாணம் —

மூத்த கவிஞர், தமிழறிஞர்



தேசிய கலைஇலக்கியப் பேரவையின் தலைவர் கலாநிதி இ.முருகையனின் 70ஆவது அகவை நிறைவு குறித்த கலை இலக்கிய ஒன்றுகூடல், எதிர் வரும் 18-09-2005 ஞாயிறு பி.ப. 3.30 மணிக்கு திருநெல்வேலி இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

க.தணிகாசலம் தலைமையில் இடம் பெறவுள்ள இந்த ஒன்றுகூடலில் - வரவேற்புரையை சட்டத்தரணி சோ.தேவராஜா நிகழ்த்துவார். பேராசிரியர் அ.சண்முகதாஸ், முருகையனின் கட்டுரைகள் பற்றியும், பேராசிரியர் சி.சிவசேகரம் கவிதைகள் பற்றியும், தே.தேவானந் நாடகங்கள் பற்றியும், மதிப்புரைகள் வழங்குவர்.

வாழ்த்துரைகள் ஏ.ஜே.கனகரட்னா, குழந்தை ம.சண்முகலிங்கம், பேராசிரியர் கே.சிவலிங்கராஜா, சி.கா.செந்திவேல், பகீரதி கணேசதுரை, கலாநிதி செ.திருநாவுக்கரசு, ஈஸ்வரி தர்மலிங்கம் ஆகியோர் வழங்குவர்.

கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் 'கவிதைக்குள் உயிர் ஒன்றி வாழ்' என்னும் தலைப்பில் கவிஞர்கள் கல்வயல் வே.குமாரசுவாமி, ரி.திருக்குமரன், த.ஜெயசீலன், அழ பகீரதன் ஆகியோர் கவியுரைப்பார்கள்.

# வீடமைப்புத் திட்டக் கொடுப்பனவு 1622 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் —

உலக வங்கியின் வடக்கு - கிழக்கு மாகாண மீள் வீடமைப்புத் திட்டத்தின் கீழ், யாழ். மாவட்டத்தில் இதுவரை 1622 பேருக்கு 1 ஆம் கட்ட கொடுப்பனவான 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக உலகவங்கியின் வீடமைப்புத் திட்ட யாழ். மாவட்ட பிரதி பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்தார்.

உலக வங்கியால் இந்த வீடமைப்புத் திட்டத்தின் 1 ஆவது கட்டக் கொடுப்பனவில், முதற் கட்டமாக ஆயிரம் பயனாளிகளுக்கு 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

தற்போது மேலதிகமாக 622 பேருக்கு 1 ஆம் கட்டக் கொடுப்பனவாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இந்த மேலதிகமான 1 ஆம் கட்டக் கொடுப்பனவு, குடாநாட்டில் கண்ணிவெடிகள் அகற்றிக் கையளிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வீடமைப்புத் திட்ட இரண்டாவது கட்டக் கொடுப்பனவு இதுவரை 744 பயனாளிகளுக்கும், 3 ஆவது கட்டக் கொடுப்பனவு 154 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த 2 ஆம், 3ஆம் கட்டக் கொடுப்பனவுகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நாவாந்துறை கடற்கரை வீதிக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

கொக்குவில் —

நவாந்துறை வடக்கு கடற்கரை வீதியில் புதிதாக மின் விநியோகத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆறுகால்மடம் வீதியிலிருந்து, நாவாந்துறை பரலோக மாதா ஆலயம் வரையான பகுதிகளில் புதிதாக மின்கம்பங்கள் நிறுத்தி, மின்கடத்தி பொருத்த வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

பொம்மைவெளி, சூரியவெளி மற்றும் நாவாந்துறை வடக்கு வயல்வெளிப் பகுதிகளில், குடியேறியுள்ள குடியிருப்பாளர்கள் இதனால் விரைவில்பயனடைவார்களெனத் தெரிவிக்கப்படுகிறது. (206)

## விளையாட்டு போட்டிகள்

சுன்னாகம் —

சுன்னாகம் பிரதேச சபையால் உள்ளூராட்சிவாரத்தை முன்னிட்டு, தமது எல்லைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் துடுப்பாட்டம், உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றனர். இதனால் பிரதேச சபைக்கும், மக்களுக்கும் நெருக்கமான தொடர்பு ஏற்பட்டுவருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. (72)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : க.பாரதிகா

முகவரி : கரவெட்டி தெற்கு.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ------------------

முகவரி : ------------------

பிறந்த ஆண்டு : ------------------

கூப்பன்களும் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------

பெற்றோர் ஒப்பம்


# சின்னஞ்சிறு செய்திகள்...

## தேர்தல் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம் —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்துக்கு ஆரம்பகட்டமாக ஐக்கிய தேசியக் கட்சியால் தேர்தல் சுவரொட்டிகள் குடாநாட்டில் ஆங்காங்கே ஒட்டப்பட்டிருக்கின்றன.

இந்தச் சுவரொட்டிகள் யாழ். நகரப்பகுதி மற்றும் தென்மராட்சிப் பகுதிகள் சிலவற்றிலும் ஒட்டப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

## பாடசாலை அதிபர்களுக்கான சுற்று சூழல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் —

மத்திய சுற்றாடல் அபிவிருத்தி சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தால், யாழ். மாவட்ட அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்குமான சுற்றுச்சூழல் சம்பந்தமான கருத்தரங்கு- நேற்று முன்தினம் யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது பாடசாலை மாணவர்களுக்குச் சுற்றுச்சூழல் சம்பந்தமான அறிவை வழங்கும் வகையில் - பாடசாலை அதிபர்களுக்கு அதிகாரசபையின் சுற்றாடல் அதிகாரிகளால் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இந்தக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## நிறை நிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் —

யாழ்.நகர ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் நிறை நிலா நாட்கருத்தரங்கு- இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

எழுத்தாளர் செங்கைஆழியான் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் "தற்கால இலக்கியப் போக்குகள்" எனும் தலைப்பில் கருத்துரை இடம்பெறும்.

## நிரந்தர சமாதானம் வேண்டி சர்வசக்தி மஹா யாகம்

மானிப்பாய் —

பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவின் 80 ஆவது அவதார ஆண்டில், நாட்டில் நிரந்தர சாந்தி சமாதானம் ஏற்பட வேண்டுமென வேண்டி, வட பிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின் இணைப்புக் குழுவால், மானிப்பாய் சோதி வேம்படி ஸ்ரீசத்திய சாயி பாடசாலை மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியது.

இந்த யாக நிகழ்வு தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

இந்த மஹா யாகத்தில் ஆசியுரைகளை - பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனத்தின் நிறுவுனரும், முன்னாள் வவுனியா மாவட்ட அரச அதிபருமான ஸ்ரீ .செ.சிவஞானம், நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் உப அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (100)

## பாங்ஷால் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படவில்லை


குருநகர் —

யாழ்.பாங்ஷால் வீதி கடந்த 15 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாமல் இருந்து வருகிறது.

இதனால் மிகவும் பாரிய சேதங்களுக்கு உள்ளாகி இருக்கும் வீதியைப் பயன்படுத்துவோர் சொல்லொணா அசௌகரியங்களுக்கு உள்ளாகுகின்றனர்.

இந்த வீதியால் சின்னக் கடைச் சந்தைக்குச் செல்வோர் மற்றும் சம்பத்திரிசியார், கன்னியர் மடம், சென்.ஜேம்ஸ், சாள்ஸ் ஆகிய பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகள், குருமார்கள், உத்தியோகத்தர்கள் போன்ற பலதரப்பட்டவர்களும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். (206)

# அறிவுச் சமர் 2005 போட்டியின் இரண்டாம் நாள் நிகழ்வுகள்



கிளிநொச்சி—

தமிழீழ மாணவர் அமைப்பின் ஒழுங்கமைப்பில் தமிழ்த் தொலைக்காட்சி வலயமைப்பு (ரி.ரி.என்.) நடத்தும் அறிவுச் சமர் 2 அறிவுப் போட்டியின் இரண்டாம் நாள் போட்டி கிளிநொச்சி மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் ஆரம்பமாகிச் சிறப்புற நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச் சுடரை, கிளிநொச்சி மாவட்ட கல்வித் திணைக்கள ஆசிரிய ஆலோசகர் திருமதி இதயராஜன், வெற்றிலைக்கேணி வித்தியாலய அதிபர் தயாபரன், இரணைதீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை ஜயராஜா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை நிதித் துறையைச் சேர்ந்த திருமறவன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின்போது, தியாகி லெப்டினட் கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நிகழ்வின் முதலாம் நாள் நிகழ்வும் கடைப்பிடிக்கப்பட்டது. இதில் தியாகி லெப்டினட் கேணல் திலீபன் திருவுருவப் படத்துக்கான ஈகைச் சுடரை சுவிஸ் நாட்டு தொலைக்காட்சி வலயமைப்பின் (ரி.ரி.என்.) பணிப்பாளர் செல்வராசா ஏற்றி வைக்க, திருவுருவப்படத்துக்கான மலர் மாலையை கனகராயன்குள மகாவித்தியாலய ஆசிரியர் தேவகி அணிவித்தார். தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு ஆசிரிய, மாணவர்கள் மற்றும் பொது மக்கள் மலர் வணக்கம் செலுத்தினர்.

முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி, வெற்றிலைக் கேணி மகாவித்தியாலயம், வவுனி..ா கனகராயன்குள மகாவித்தியாலயம், கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயம், இரணைதீவு றோமன்கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களே நேற்று முன்தினம் அறிவுச் சமரில் பங்கு பற்றிய மாணவர்கள் ஆவர்.

# மன்னாரில் குடல்புழு ஒழிப்பு மருந்து வழங்கும் செயற்திட்டம்

மன்னார்—

சுகாதார செயற்பாட்டுத் திட்டத்தால் மன்னார் மாவட்டத்தில் குடற்புழு ஒழிப்பு மருந்து வழங்கும் திட்டம் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

இந்தத் திட்டத்தால் சுமார் 30 ஆயிரம் சிறுவர்கள் நன்மை அடையவுள்ளனர். குடற்புழுத் தாக்கத்திலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கும் வகையில், சொட்டு மருந்து விநியோகிக்கப்படுகிறது.

மன்னார் மாவட்டத்தில் ப்ாடசாலை மற்றும் சுகாதார நிலையங்கள் என்பவற்றில் மருந்து வழங்குவதற்கு மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மன்னார் பிரதேச பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசச் சிறுவர்கள் இந்த நிலையங்களுக்கு வருவதன்மூலம், வைத்திய உதவியைச் பெற்றுக்கொள்ளலாம்.


இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான, சர்வதேச அமைப்பொன்றின் அனுசரணையுடன் இடம்பெறும் இந்தத் திட்டத்தால், சிறுவர்களுக்கு சொட்டுமருந்து வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு வழங்கப்படும் சொட்டுமருந்து ஒரு வருட காலப் பகுதிக்குக் குடற்புழுத் தாக்கத்திலிருந்து பாதுகாப்பை வழங்கும். சுகாதார சூழலுக்காகப் பாடுபடும் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான சர்வதேச அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

குடற்புழு நோய் புறக்கணிக்கப்பட முடியாத ஒன்றாகும். இந்த நோய் காரணமாக உலகம் முழுவதும் 150,000 சிறுவர்கள் வருடமொன்றுக்கு மரணமடைகின்றனர்.

இது சிறுகுடல் பகுதியில் தொந்தரவுகளை ஏற்படுத்தக் கூடியதாகும். வளர்ந்த புழுக்கள் காரணமாக அடிவயிற்றுப் பகுதியில் பல்வேறு தொல்லைகளும் ஏற்படலாம். அத்துடன் சிறுவர்களது வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும் இந்த நோய், பூப்படைவதைத் தாமதப்படுத்தும் வல்லமையும் கொண்டதாகும். அத்தோடு சீதபேதிக்கும் இது வழிவகுக்கலாம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்மக்களின் மனித உரிமைகள்; கிளிநொச்சியில் விசேட செயலமர்வு



கிளிநொச்சி—

தமிழ் மக்களின் மனித உரிமைகள் பற்றிய விசேட செயலமர்வு நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வு வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தால் நடத்தப்பட்டது.

மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் அருட்தந்தை ம. சே.கருணாரட்ணம் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்த செயலமர்வில், தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாகவும், அவை மீறப்படும் சந்தர்ப்பங்களில் எவ்வாறு நடவடிக்கையை மேற்கொண்டு தீர்வைப் பெறுவது என்பது பற்றியும், மக்களைப் பாதிக்கும் சில அடிப்படை மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனித உரிமைப் பிரகடனங்கள், சிறுவர் உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தங்கள், சிறுவர் - தொழிலாளர், சிறுவர்-பாலியல் துஷ்பிரயோகங்கள், சிறுவர் கொடுமைப் படுத்தப்படல் போன்ற விடயங்கள் பற்றியும் அருட்தந்தை விரிவாக விளக்கினார். இது தொடர்பாக செயலட்டை ஒன்றும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இதுபோன்ற செயலமர்வு விசுவமடு மகாவித்தியாலத்திலும் நடைபெற்றது.

தமிழீழப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளிலும், அலுவலகங்களிலும் இத்தகைய செயலமர்வுகள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளன.

# புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் முன்பள்ளி ஆக்கப்பொருள் கண்காட்சி

கிளிநொச்சி—

கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 21 முன்பள்ளி மாணவர்களின் ஆக்கப்பொருள் கண்காட்சி கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது.

இந்த நிகழ்வு இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன நிர்வாக அலுவலர் ப.புஸ்பகுமாரி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன செயலாளர் குமாரசாமி, இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை பிரதி அதிபர் அகிலேஸ்வரன், கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன திட்ட இணைப்பாளர் தயாளன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.


தமிழீழ தேசியக் கொடியை வட்டக்கச்சி பிரதேச அரசியற் துறைப் பொறுப்பாளர் சுடர் ஏற்றி வைத்தார். கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன கொடியை நிறுவன இணைப்பாளர் சிறிரஞ்சனியும், முன்பள்ளி கல்விமேம்பாட்டு நிலைய இணைப்பாளர் கௌசலாவும் ஏற்றிவைத்தனர்.

கண்காட்சி மண்டபத்தை கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன உதவிப் பணிப்பாளர் நவநீதன் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வின் ஆசியுரையை பிரதி அதிபர் அகிலேஸ்வரன் வழங்கினார். வரவேற்புரையை கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வுக்கழக நிறுவன பணிப்பாளர் நா.யோகரட்ணம் நிகழ்த்தினார். சிறப்புரையை வட்டக்கச்சிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் சுடர், கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன செயலாளர் குமாரசாமி ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனையடுத்து முன்பள்ளி சிறார்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி பிரிவு பணிப்பாளர் பாண்டியன், வட்டக்கச்சி பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர், கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன பணியாளர்கள், பெற்றோர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (9)



# காலச் சுவட்டில்...

**செப்ரெம்பர் - 17** | **இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை**

1787 : அமெரிக்க அரசியல் சட்டம் 12 மாநிலப் பிரதிநிதிகளால் அங்கீகரிக்கப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

1900 : அவுஸ்ரேலியா கொமன் வெல்த் அமைப்பைச் சேர்ந்த நாடு என, பிரித்தானிய அரசு பிரகடனம் செய்தது.

1917 : பதினைந்து வயது பூர்த்தியடைந்த அனைவரும் இராணுவத்தில் கட்டாயமாகச் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று ஜேர்மனி அறிவித்தது.

1922 : பெர்லினில் ஆலம்பாரா சினிமா திரையரங்கில் முதன் முதலாக பேசும் படம் பொதுமக்களுக்கு திரையிட்டுக் காண்பிக்கப்பட்டது.

1926 : அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் மிகக் கடுமையான சூறாவளி வீசியது. நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். 76 கோடி டொலர் பெறுமதியான சொத்து இழப்பு ஏற்பட்டது.

1939 : பிரிட்டிஷ் விமானம் தாங்கிக் கப்பலான கரேஜியஸ், ஜரிஸ் கடற்கரையருகே ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பலால் தாக்கப்பட்டு மூழ்கியது.

1948: இஸ்ரேல் - பலஸ்தீனம் பிரச்சினையை சமாதானமான முறையில், பேச்சுவார்த்தை மூலம் பேசித் தீர்வுகாண வைக்க வந்த ஐக்கிய நாடுகள் சபையின் நடுவரான சுவீடனைச் சேர்ந்த கவுண்ட் போர்க் பெர்னாடோட் இஸ்ரேலிய தீவிரவாதிகளால் ஜெருசேலத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

☆ : சீனாவில் உள்நாட்டுப் போர் ஆரம்பமாகியது.

1949: இந்தியாவில் திராவிட முன்னேற்றக் கழகத்தினது ஆரம்ப விழா சென்னையில் விமரிசையாக நடைபெற்றது.

1953: உடல் அவயவங்கள் ஒட்டிப் பிறந்த இரட்டையர்களைப் பிரிக்கும் அறுவை சிகிச்சை அமெரிக்காவில் வெற்றிகரமாக நடைபெற்றது. சையாமிஸ் இரட்டையர்களைப் பிரித்த சத்திர சிகிச்சை என இது குறிப்பிடப்பட்டது.

1959: எக்ஸ் - 15 என்னும் விமானத்தை ஏ.ஸ்கட் கிராஸ் ஃபீல்ட் என்ற விமானி மணிக்கு 2242 கி.மீ வேகத்தில் ஓட்டி சாதனை படைத்தார்.

1978 : ஈராக்கில் மிகப் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது. 26,000 ற்கும் மேற்பட்ட மக்கள் இறந்தனர்.

1984: உலகத் தமிழ் மா மன்றம் சென்னையில் உதயமாகியது.

1985: மூன்று விண்வெளி வீரர்களுடன் ரஷ்யா சோயுஸ் டி-14 என்ற விண்கலத்தை அனுப்பியது.

1988: ஹைட்டி அதிபர் நாம்பி இராணுவப் புரட்சி மூலம் பதவியிலிருந்து விரட்டப்பட்டார்.

1991: வடகொரியா, தென்கொரியா, மைக்ரோனேஷியா, லிதுவேனியா, லாட்வியா, ஈஸ்ட் டோனியா ஆகிய நாடுகள், ஐக்கிய நாடுகள் சபையில் இணைத்துக் கொள்ளப்பட்டன.

தொகுப்பு - சந்துரு